ஶ்ரீ



ஶ்ரீ குறுங்கைநாயகி ஸமேத ஶ்ரீ சுந்தர பரிபூர்ணாய நம :

ஶ்ரீமதே ராமாநுஜாய நம :

ஶ்ரீமத் வரவரமுநயே நம : ஶ்ரீ குருங்கமுநயே நம :



திருக்குறுங்குடி

ஶ்ரீ பேரருளாள ராமானுஜ ஜீயர் ஸ்வாமி மடம் பரம்பரை

ஶ்ரீ உ. வே. திருநாராயண அய்யங்கார் ஸ்வாமியால் தொகுக்கப்பட்டது.

திருஜீயர் மடம் வெளியீடு

[பிரமோதூத] [1990

acharya.org

ஸ்ரீமதே ராமானுஜாய நம :

ஸ்ரீமத் வரவரமுநயே நம :

ஸ்ரீ குறுங்கமுநயே நம :



முன்னுரை

திருக்குறுங்குடி ஸ்ரீ பேரருளாள ராமானுஜ ஜீயர் ஸ்வாமி மடம் வரலாறு தொன்மையான தாள பத்திரத்தில் இருந்ததை சென்னைப் பல்கலைக் கழகத்தில், தமிழ் ஆராய்ச்சியாளராக யிருந்த வித்வான் ஸ்ரீ வேங்கடராஜலு ரெட்டியார் அவர்களால் 1955ம் வருஷம் பதிப்பிக்கப்பட்டது.

மறுபதிப்பு வெளிவரவேண்டும் என்று, சிஷ்யர்களும் அபிமானிகளும் பிரார்த்தித்துக்கொண்டதற்கிணங்க, இப்பொழுது ஸ்ரீ உ. வே. திருநாராயண அய்யங்கார் ஸ்வாமியால் மேற்படி வரலாற்று ஸ்ரீ கோசத்தை அனுசரித்து, ஆங்காங்கே விடவேண்டியதை விட்டும் சேர்க்க வேண்டிய முக்கியமான விஷயங்களைச் சேர்த்தும், 48-வது பட்டம் ''வர்த்தமான'' ஸ்ரீ ஜீயர் ஸ்வாமி வரையிலான வைபவங்களும், தெளிவாகவும் விளக்கமாகவும் சேர்க்கப்பட்டிருப்பது மிகவும் போற்றக்கூடியதாகும்.

ஸ்ரீ ஜீயர் ஸ்வாமிகள் தர்சனார்த்தமாக வடதேச யாத்திரை எழுந்தருளினதே இல்லை என்ற துர்ப் பிரச்சாரத்தை ஆராய்ச்சி செய்து, சரியான ஆதாரங்களைச் சேர்த்து தெளிவாக காட்டி, துர்ப்பிரசாரத்தை முறியடித்திருப்பது வரவேற்கத்தக்கது.

acharya.org

திருநாராயணபுரம் கைங்கர்ய ஸ்ரீயைத் திருத்தி, பணி கொண்ட சமயத்தில், ஸ்ரீ ஸ்வாமி எம்பெருமானார், திருக்குறுங்குடியிலிருந்து ஸ்ரீ வைஷ்ணவர்களை வரவழைத்து, அவர்களுக்கு ''ஐம்பத்திருவர்'' என்ற பெயர் சூட்டியும், ''திருக்குறுங்குடி தாஸர்'' என்ற அருளிப்பாட்டுடன், சில கைங்கரியங்களை நியமித்து, இன்றும் கைங்கரியங்கள் ''திருக்குறுங்குடி தாஸர்'' என்ற அருளிப்பாட்டுடன், செல்வநாரணன் என்ற செல்லப் பிள்ளை கைங்கரியத்தை அவிச்சின்னமாய் அனுபவித்து வருகிறார் என்பது ஸகல ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கும் நன்கு தெரியும்.

அறியக்கற்று வல்லாரான ஸ்ரீ வைஷ்ணவர்கள் எழுந்தருளியிருக்கும் திருக்குறுங்குடியில், பெரியோர்களால் கர்ணபரம்பரையாய் வழங்கிவரும் செய்தியை, ''முக்கிய கவனிப்பு'' என குறிப்பிட்டு எழுதியிருப்பது, மிகவும் பாராட்டக்கூடிய விஷயம்.

பொதுவாக, ''ஸ்ரீ பேரருளாள ராமானுஜ ஜீயர் ஸ்வாமி மடம் பரம்பரை'' என்ற இந்த ஸ்ரீகோசம், சகல ஸ்ரீவைஷ்ணவர்களும் சிஷ்யர்களும் அபிமானிகளும் வரவேற்பார்கள் என்பதில் ஐயமில்லை.

ராமானுஜார்ய திவ்யாக்ஞா
வர்த்ததாம் அபிவர்த்தாம்

அடியேன்

என். சீனிவாசன்

(என். சீனிவாச அய்யங்கார்)

acharya.org



நாச்சியார்களுடன்
"ஸ்ரீ வைஷ்ணவ நம்பி"

acharya.org

பெரிய பிராட்டியார் ஸ்ரீ நம்பெருமாள்
சேர்த்தி பங்குனி உத்திரம்

acharya.org

ஸ்ரீ



ஸ்ரீ சுந்தரபரிபூர்ணாய நம:
ஸ்ரீ மதே ராமானுஜாய நம:
ஸ்ரீ மத்வரவரமுநயே நம:
ஸ்ரீ குருங்கமுநயே நம:

ஸ்ரீசைலேச தயாபாத்ரம் தீபக்த்யாதிகுணார்ணவம் ।
யதீந்த்ரப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம் முநிம் ॥

லக்ஷ்மீநாதஸமாரம்பாம் நாதயாமுநமத்யமாம்
அஸ்மதாசார்யபர்யந்தாம் வந்தே குருபரம்பராம் ॥

யோநித்யமச்யுதபதாம்புஜயுக்மருக்ம
வ்யாமோஹதஸ் ததிதராணித்ருணாயமேநே ।
அஸ்மத்குரோர்பகவதோஸ்யதயைகஸிந்தோ
ராமாநுஜஸ்யசரணௌ சரணம் ப்ரபத்யே ॥

மாதாபிதாயுவதயஸ்தநயாவிபூதிஸ்
ஸர்வம்யதேவ நியமேநமதந்வயாநாம் ।
ஆத்யஸ்யந: குலபதேர் வகுளாபிராமம்
ஸ்ரீமத் ததங்க்ரியுகளம் ப்ரணமாமி மூர்த்நா ॥

பூதம் ஸரச்ச மஹத்' ஹ்வய பட்டநாத்
ஸ்ரீபக்திஸார குலசேகர யோகிவாஹாந் ।
பக்தாங்க்ரிரேணு பாகால யதீந்த்ரமிஸ்ராந்
ஸ்ரீமத்பராங்குசமுநிம் ப்ரணதோஸ்மி நித்யம் ॥

கேசவாதி நாமங்கள்

ஊர்த்வபுண்ட்ரதாரணமந்திரம்.
கேசவாய நம:
நாராயணாய நம:
மாதவாய நம:
கோவிந்தாய நம:

ஸ்ரீசூர்ணதாரணமந்திரம்
ஸ்ரீ தேவ்யை நம:
அம்ருதோத்பவாயை நம:
கமலாயை நம:
சந்த்ரசோபிந்யை நம:

acharya.org

விஷ்ணவே நம :
மதுஸூதநாய நம :
திரிவிக்ரமாய நம :
வாமநாய நம :
ஸ்ரீதராய நம :
ஹ்ருஷீகேசாய நம :
பத்மநாபாய நம ;
தாமோதராய நம :

வராரோஹாயை நம :
ஹரிவல்லபாயை நம :
விஷ்ணுபத்ந்யை நம :
வைஷ்ணவ்யை நம :
சார்ங்கிண்யை நம :
தேவதேவிகாயை நம :
மஹாலக்ஷ்ம்யை நம :
ஸுரஸுந்தர்யை நம :

ஊர்த்வபுண்ட்ரம் தரித்தபின்,

நித்யாநுஸந்தானம்

கேசவாய நம :
நாராயணாய நம :
மாதவாய நம :
கோவிந்தாய நம :
விஷ்ணவே நம :
மதுஸூதநாய நம :

த்ரிவிக்ரமாய நம:
வாமநாய நம :
ஸ்ரீதராய நம :
ஹ்ருஷீகேசாய நம ;
பத்மநாபாய நம :
தாமோதராய நம ;

ச்லோக குருபரம்பரை

அஸ்மத்தேசிகமஸ்மதீயபரமா
சார்யா நசேஷாந் குரூந்
ஸ்ரீமல் லக்ஷ்மணயோகிபுங்கவ மஹா
பூர்ணௌமுநிம் யாமுநம் |
ராமம் பத்மவிலோசநம் முநிவரம்
நாதம் சடத்வேஷிணம்
ஸேநேசம் ஸ்ரீயமிந்திராஸஹசரம்
நாராயணம் ஸம்ச்ரயே ||

வாக்ய குருபரம்பரை

அஸ்மத் குருப்யோ நம:
அஸ்மத் பரமகுருப்யோ நம:
அஸ்மத் ஸர்வகுருப்யோ நம:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம;
ஸ்ரீபராங்குச தாஸாய நம:
ஸ்ரீமத் யாமுநமுநயே நம:
ஸ்ரீராமமிச்ராய நம:

ஸ்ரீபுண்டரீகாக்ஷாய நம:
ஸ்ரீமத் நாதமுநயே நம :
ஸ்ரீமதே சடகோபாய நம:
ஸ்ரீவிஷ்வக்ஸேநாய: நம :
ஸ்ரீயை நம;
ஸ்ரீதராய நம:

acharya.org

திருமந்திரம்

ஓம் நமோ நாராயணாய

த்வயம்

ஸ்ரீமந்நாராயண சரணௌ சரணம் ப்ரபத்யே
ஸ்ரீமதே நாராயணாய நம:

சரமஸ்லோகங்கள்

ஸர்வதர்மாந் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ ।
அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மாசுச: ॥

ராம சரமஸ்லோகம்

ஸக்ருதேவ ப்ரபந்நாய தவாஸ்மீதி ச யாசதே ।
அபயம் ஸர்வபூதேப்யோ ததாம்யேதத் வ்ரதம் மம ॥

வராஹ சரமஸ்லோகம்

ஸ்திதே மநஸி ஸுஸ்வஸ்தே சரீரே ஸதி யோ நர: ।
தாது ஸாம்யே ஸ்திதேஸ்மர்தா விஸ்வரூபம் நமாமஜம் ॥

ததஸ்தம் ம்ரியமாணந்து காஷ்டபாஷாண ஸந்நிபம் ।
அஹம் ஸ்மராமி மத்பக்தம் நயாமி பரமாங்கதிம் ॥

பெரிய பெருமாள்

ஸ்ரீஸ்தநாபரணம் தேஜ: ஸ்ரீரங்கேசயமாச்ரயே ।
சிந்தாமணி மிவோத்பாந்த முத்ஸங்கே(அ) நந்தபோகிந: ॥

பெரியபிராட்டியார்

நம: ஸ்ரீரங்கநாயக்யை யத்ப்ரூவிப்ரமபேதத: ।
ஈசேஸிதவ்யவைஷம்ய நிம்நோந்நதமிதம் ஜகத் ॥

acharya.org

ஸேனை முதலியார்

ஸ்ரீரங்கசந்த்ரமஸ மிந்திரயாவிஹர்த்தும்
விந்யஸ்ய விச்வ சிதசிந்நயநாதிகாரம் ।
யோநிர் வஹத்யதிசமங்குளிமுத்ரயைவ
ஸேநாந்ய மந்ய விமுகாஸ்தமஸிச்ரியாம ॥

நம்மாழ்வார்

ருஷிம் ஜுஷாமஹே க்ருஷ்ண
த்ருஷ்ணாதத்த்வ மிவோதிதம் ।
ஸஹஸ்ரசாகாம் யோ த்ராக்ஷீத்
த்ராவிடீம் ப்ரஹ்மஸம்ஹிதாம் ॥

நாதமுனிகள்

நமோ(அ)சிந்த்யாத்புதாக்லிஷ்ட ஜ்ஞாநவைராக்யராசயே ।
நாதாயமுநயே(அ)காத பகவத்பக்திஸிந்தவே ॥

உய்யக்கொண்டார்

நம: பங்கஜநேத்ராய நாத ஸ்ரீபாதபங்கஜே ।
ந்யஸ்தஸர்வபராயாஸ்மத்குலநாதாய தீமதே ॥

மணக்கால்நம்பி

அயத்நதோ யாமுநமாத்மதாஸம்
அலர்க்கபத்ரார்ப்பணநிஷ்க்ரயேண ।
ய: க்ரீதவாநாஸ்தித யௌவராஜ்யம்
நமாமி தம் ராம மமேய ஸத்வம் ॥

ஆளவந்தார்

யத் பதாம்போருஹத்யாந
வித்வஸ்த்தாஸேஷகல்மஷ: ।
வஸ்துதா முபயாதோஹம்
யாமுநேயம் நமாமி தம் ॥

acharya.org



ஸ்ரீ ஸ்வாமி எம்பெருமானார் பக்கல் ஸச்சிஷ்யனாக
நின்று மந்திரோபதேசம் பெற்று
''ஸ்ரீ வைஷ்ணவ நம்பி'' என்ற தாஸ்ய நாமம்
பெற்றவனும் 'நாம்' 'நம்' ராமானுஜனையுடையோம்
என்று அருளிய பெருமாள்.

ஸ்ரீ ஸ்வாமி எம்பெருமானாரின் அபராவதாரமான
மன்னியசீர் மணவாளமாமுனி பக்கல்
ஸச்சிஷ்யனாக நின்று ''ஈடு'' உரைப்பது கேட்டு
பூரித்து நின்ற பெருமாள்

Srivastsam

acharya.org

பெரிய நம்பி

கமலாபதிகல்யாணகுணாம்ருத நிஷேவயா ।
பூர்ணகாமாய ஸததம் பூர்ணாய மஹதே நம: ॥

உடையவர்

ராமாநுஜமுநிர் ஜீயாத் யோ ஹரேர்பக்தியந்த்ரிதாத் ।
கலிகோலாஹலக்ரீடாமுதாக்ரஹமபாஹரத் ॥

யோ நித்ய மச்யுத பாதாம்புஜயுக்மருக்ம
வ்யாமோஹதஸ்ததி தராணி த்ருணாயமேநே
அஸ்மத்குரோர் பகவதோஸ்ய தயைகஸிந்தோ
ராமாநுஜஸ்ய சரணௌ சரணம் ப்ரபத்யே.

வாழித் திருநாமம்

சீராரும் எதிராசர் திருவடிகள் வாழி
திருவரையில் சாத்தியசெந் துவராடை வாழி
ஏராருஞ் செய்யவடி வெப்பொழுதும் வாழி
இலங்கியமுந் நூல்வாழி இணைத்தோள்கள் வாழி
சோராத துய்யசெய்ய முகச்சோதி வாழி
தூமுறுவல் வாழிதுணை மலர்க்கண்கள் வாழி
ஈராறு திருநாமம் அணிந்த எழில் வாழி
இனிதிருப்போ டெழில்ஞான முத்திரைவா ழியவே.

அறுசமயச் செடியதனை அடியறுத்தான் வாழியே
அடர்ந்துவருங் குதிர்ட்டிகளை அறத்துறந்தான் வாழியே
செறுகலியைச் சிறிதுமறத் தீர்த்துவிட்டான் வாழியே
தென்னரங்கர் செல்வமுற்றுந் திருத்திவைத்தான் வாழியே
மறையதனில் பொருளனைத்தும் வாய்மொழிந்தான் வாழியே
மாறனுரை செய்ததமிழ் மறைவளர்த்தோன் வாழியே
அறமிகுநற் பெரும்பூதூர் அவதரித்தான் வாழியே
அழகாரும் எதிராசர் அடியிணைகள் வாழியே.

acharya.org

அத்திகிரியருளாள ரடிபணிந்தோன் வாழியே
அருட்கச்சி நம்பியுரை ஆறுபெற்றோன் வாழியே
பக்தியுடன் பாடியதைப் பகர்ந்திட்டான் வாழியே
பதின்மர்கலை யுட்பொருளைப் பரிந்துகற்றான் வாழியே
சுத்தமகிழ் மாறனடி தொழுதுய்ந்தோன் வாழியே
தொல்பெரிய நம்பிசரண் தோன்றினான் வாழியே
சித்திரையில் ஆதிரைநாள் சிறக்கவந்தோன் வாழியே
சீர்பெரும்பூ தூர்முனிவன் திருவடிகள் வாழியே.

எண்டிசைஎண் இளையாழ்வார் எதிராசன் வாழியே
எழுபத்து நால்வர்க்கும் எண்ணான்குரைத்தான் வாழியே
பண்டைமறை யைத்தெரிந்த பாடியத்தோன் வாழியே
பரகால னடியிணையைப் பரவுமவன் வாழியே
தண்டமிழ் நூல் நம்மாழ்வார் சரணானான் வாழியே
தாரணியும் விண்ணுலகும் தானுடையோன் வாழியே
தெண்டிரைசூழ் புதூர்எம் பெருமானார் வாழியே
சித்திரையில் செய்யதிரு வாதிரையோன் வாழியே

சங்கர பாற்கர யாதவ பாட்டப்ர
பாகரர் தங்கள்மதம்
சாய்வுற வாதியர் மாய்குவர் என்று
சதுர்மறை வாழ்ந்திடுநாள்
வெங்கலி இங்கினி வீறு நமக்கிலை
என்று மிகத்தளர் நாள்
மேதினி நம்சுமை ஆறும் எனத்துயர்
விட்டு விளங்கியநாள்
மங்கைய ராளி பராங்குச முன்னவர்
வாழ்வு முளைத்திடுநாள்
மன்னிய தென்னரங் காபுரி மாமலை
மற்றும் உவந்திடுநாள்
செங்கயல் வாவிகள் சூழ்வயல் நாளும்
சிறந்த பெரும்பூதூர்ச்
சீமான் இளையாழ்வார் வந்தருளியநாள்
திருவா திரைநாளே.

acharya.org

வடுகநம்பி அருளிச்செய்த
ஸ்ரீ ராமானுஜ அஷ்டோத்ர சதநாம ஸ்தோத்ரம்

அத்வைத மதவிச் சேத்தாச்
விசிஷ்டாத்வைத பாரக;
குரங்கநகரீ பூர்ணம்
மந்தர ரத்நோபதேச சக;

பகவத் ராமானுஜ ஸுப்ரபாதம்

ஸ்ரீமத் குரங்க பரிபூர்ண
விபுஸ்த்வதுவக்தம், ஸ்ரீ பாஷ்ய
சாஸ்தரமமலம் த்வயிபக்தி யுக்த:
ச்ரோதும் ஸவிச்சதியதீந்தர
ஸிதோர்த்த புண்டர: தம்போத
யார்த்த மகிலப்தவ ஸுப்ரபாதம்

எதிராஜ மங்களம்

ஸ்ரீமத் குரங்க பூர்ணய
ஸ்ரீபாஷ்யம் வததே ஸ்வயம்
பித்ரே ஸம்பத் ஸுதஸ்யாபி
பாஷ்யகரராய மங்களம்

ஸ்த்திதி மவதீர யந்த்யதி
மநோரத ஸித்திமதீம்
யதிபதிஸப்ரதாய
தநோபசிதா
மதுகர மௌலிதக்ந
மததந்துர தந்தி கடா
கரட கடாஹ வாஹி
கரசீகர சீபரிதாம்

எம்பெருமானார் அடியார்கள் உலக இன்பத்தையும், பெருஞ் செல்வத்தையும் த்ருணமாக புறக்கணிப்பர்.

acharya.org

ஸ்ரீ



ஸ்ரீ குருங்கை நாயகி ஸமேத
ஸுந்தர பரிபூர்ணய நம:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம :
ஸ்ரீமத் வரவரமுநயே நம :
ஸ்ரீ குருங்கமுநயே நம :

ஸ்ரிய : பதியாய் அவாப்த ஸமஸ்தகாமனாய், அகில ஹேயப்ரதிபடனாய் நித்ய முக்தானுபாவனாய் நலமிந்ததோர் நாட்டிலே ஏழுலுகம் தனிக்கோல் செல்ல வீற்றிருக்கும்

வானிளவாசான வைகுந்த வாழ்க்கையையுடைய ஸர்வேஸ்வரன், லீலாவிபூதியிலுள்ள ஸகல ஜீவாத் மாக்களும் நோவுபடுகிறதை கண்டு அவர்களை உஜ்ஜீவிக்கத் திருவுள்ளங் கொண்டு

'' யதாயதா ஹிதர்மஸ்ய
க்லானிர் பவதி பாரத
அப்யுத்தான மதர்மஸ்ய
ததாத்மானம் ஸ்ருஜாம்யஹம் '' என்றும்

'' பரித்ராணாய ஸாதூநாம்
விநாசாய சதுஷ்க்ருதாம்
தர்ம ஸம்ஸ்தாபனார்த்தாய
ஸம்பவாமி யுகே - யுகே '' என்றும்

acharya.org

ரகுகுலஸஜாதியனுயும் யதுகுல ஸஜாதியனுயும் வந்து அவதரித்து தமருகந்தது எவ்வுருவம், அவ்வுருவம் தானே. என்றும் சொல்லுகிறபடியே உகந்தருளின நிலங்களிலே எழுந்தருளியிருக்கச் செய்தேயும் "குறுங் குடிக்கே என்னை உய்த்திடுமின்" என்றும் "தாய் வாயில் கொக்கின்பிள்ளை வெள்ளிறவுண்ணும் குறுங்குடியே என்றும் சொல்லுகிறபடியே"

"நம்பியைத் தென்குறுங்குடி நின்ற அச்செம் பொனேதிகழும் திருமூர்த்தியை உம்பர் வானவர் ஆதியஞ்சோதியை எம்பிரானை என்சொல்லி மறப்பனோ"

என்றபடி தென்குறுங்குடியில்" விபவலா வண்ய பூர்ணத்வத்துடன் நித்யவாசமாய் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கிறுன். த்ரிகாலஞானியான ஸ்ரீ சுகப்ருஹ்மரிஷி ஸ்ரீமத்பாகவதத்தில்

"க்ருதாதிஷு நராராஜந்கலாவிச்சந்தி ஸம்பவம் கலௌ கலுபவிஷ்யந்தி நாராயணபராயணு க்வசித் க்வசிந் மஹாராஜ திராவிடேஷுச பூரிச: தாம்பரபர்ணீநதீயத்ர க்ருதமாலா பயஸ்வநீ"

என்றபடி நாராயண பராயணர்களான (நாராயணனையே துதிக்ககூடியவர்) ஆழ்வார் போல்வார்கள் அவதரிக்கப் போகிருர்கள் என்று சூசிப்பித்து அருளியபடி

"ஸர்வேஸ்வரனை நோக்கி, அநந்தவ்ரதம் நோற்று பெற்றவர்களை போலன்றிக்கே நம்பியை யாஸ்ரயித் தாயிற்று இவரை பெற்றது "உடைய நங்கையார் நம்பி யை யாஸ்ரயித்து ஆழ்வாரை திருவயிறு வாய்த்தார் என்று பிரஸித்தமிறே"

acharya.org



ஸ்ரீ ராமாநுஜ நம்பி
திருக்குறுங்குடி

acharya.org



5-6-88 வைகாசி 23௳ ஸ்ரீ ஸ்வாமி நம்மாழ்வார் பொன்னுங்குரட்டில் திருக்குறுங்குடி ஜீயர் ஸ்வாமியால் சமர்பிக்கப்பட்ட தங்கம் பவழம் முத்து இவைகளால் செய்யப்பட்ட புலிநகம் ஆமைநகம் மாலையை சாத்திக் கொண்டு சேவை சாதிக்கிறார்.

acharya.org

''ஆதித்யராமதிவாகராச்யுத பானுக்களுக்கு போகாத வுள்ளிருள் நீங்கி சோஷியாத பிறவி கடல்வற்றி விகஸியாத போதில் கமல மலர்ந்தது வகுளபூஷண பாஸ்கரோ தயத்திலே''

என்றபடி '' ஸ்ரீஸ்வாமி நம்பியே தாம்பரபர்ணீ நதீ தீரத்தில் ஸ்ரீஸ்வாமி ஆழ்வாராக அவதரித்து.

''கலியும் கெடும் கண்டு கொண்மின்''

என்று பவிஷ்யத்தான விஷயத்தைக் கண்டு பேசினபடி ஸ்ரீஸ்வாமி எம்பெருமானார் போல்வார்கள் அவதரித்து ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பரதாயத்தை பரவ செய்யபோகிறார்கள் என்று சூசிப்பித்து அருளினுறிறே '' எம்பெருமான் நியமனப்படி திருவனந்தாழ்வான் ''பூதபுரி என்ற ஸ்ரீ பெரும்புதூரில்

''கலௌராமானுஜோ முநி:''

என்ற திருநாமத்துடன் அவதாரம் செய்து ஸகல வேத பராங்கதராய் வேதவேதாந்தங்கள்கற்று விசிஷ்டாத்வைத ஸ்ரீவைஷ்ணவராய் விளங்கி, கச்சி தேவாதி தேவனை பேரருளானிடம் தூர்யாஸரமம் பெற்றுக்கொண்டார்.

ஸ்ரீஸ்வாமி எம்பெருமானார் திவ்யதேசங்கள் தோறும் எழுந்தருளி மங்களாசாஸனம் செய்து கொண்டு ஸ்ரீ வைஷ்ணவஸம்ப்ரதாயத்தை ப்ரபலமடைய செய்து வந்தார் பெருவிசும்பருளும் ''பேரருளாளன் பத்ரிகாஸ்ரமத்தில் தானே ஆசாரியனுமாயும் தானே சிஷ்யனுமாய் கொண்டு மந்த்ரோபதேசம் செய்தருளினுப் போலே, திருக்குறுங்குடிக்கு எழுந்தருளின ஸ்ரீஸ்வாமி எம்பெருமானார் பெருமணி வானவருச்சிவைத்த பேரருளாளனை ஸ்ரீநம்பியை ஸச்சிஷ்யனாக கொண்டு மந்த்ரோபதேசம் செய்து ''ஸ்ரீவைஷ்ணவ நம்பி என்றும்'' ''ஸ்ரீராமானுஜ நம்பி'' என்று தாஸ்யநாமம் ப்ரஸாதித்து அருளினுறிறே.

acharya.org

ஸ்ரீஸ்வாமி நம்பியும்'' தந்யோஸ்மி'' என்றும்

''நாம் நம் ராமானுஜனையுடையோம்''

என்று அருளினர் ஆனதுபற்றியே இத்திவ்யதேசத்திற்கு ''தக்ஷிண, பத்ரி'' என்று திருநாமமாயிற்று.

ஸ்ரீ ஸ்வாமி நம்பி ஸ்வாமி (எம்பெருமானர்) யின் சிஷ்யனன வடுக நம்பி வேஷத்தில் ஸ்வாமி (எம்பெருமானர்) யின் பக்கல் எழுந்தருளி அவர் (எம் பெருமானர்) திருக்கையாலே திருமண் காப்பு சாத்திக் கொண்டு எழுந்தருளினது ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பரதாயத் தில் மிகவும் பரவலம்.

ஸ்ரீ ஸ்வாமி கொஞ்சகாலம் வைஷ்ணவ வாமனத்தில் ஸ்ரீ நம்பியை மங்களாசாஸனம் செய்து கொண்டும் கைங்கரியங்கள், நிர்வாகங்கள் செய்து கொண்டும் எழுந்தருளியிருந்து ஸ்ரீ நம்பியின் நியமனத்தின் பேரில் பெரிய நம்பி வம்சத்தில் ''பூர்ணாசாரியர்'' என்றவருக்கு துரியாஸ்ரம ஸ்வீகாரம் செய்து வைத்து,

''பேரருளாள ராமானுஜ ஜீயர்''

என்ற திருநாமத்தையும் அருளி ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பர தாயத்தையும் தர்ஸன ப்ரவர்த்தகத்தையும் ஸ்ரீ ஸ்வாமி நம்பி ஸன்னிதி கைங்கரிய நிர்வாகங்களையும் செய்து வரும்படியருளினர் என்பது ஸம்பரதாயத்தில் ப்ரஸித்தம்.

திருமங்கையாழ்வார் ''பேரருளாளன்'' என்று மங்களாசாஸனம் செய்யப்பட்ட ஸ்ரீ வைஷ்ணவ நம்பி எழுந்தருளியிருக்கிற ''வாமனகுடியிலும், ஸ்ரீரங்கம், ஸ்ரீவில்லிபுத்தூர், திருப்புல்லாணி, திருக்குருகூர், ஸ்ரீவைகுண்டம், வேதபுரி மன்னார்கோவில், முதலான திவ்யதேசங்களில் பெரியநம்பி திருவம்சத்தவர்கள் எழுந் தருளியிருப்பதையும், அதுதன்னிலும் வாமனகுடியில் ஸ்ரீநாதமுனி வம்சமான ''அரையர் ஸ்வாமிகளும் பெரிய

acharya.org

தேவாதி தேவனை
'' ஸ்ரீ பேரருளாளன்''

acharya.org

நம்பி திருவம்சத்து ஸ்வாமிகளும்'' நிறைந்து வாசம் செய்தும், ஸ்ரீ வைஷ்ணவ நம்பி ஸந்நிதியின் ஸகல கைங்கர்யங்களையும் நிர்வாகங்களையும் ஷி வம்சத்தவர்களாலே நடந்து வருகிறதை ஷி ஸ்வாமி பார்த்தும் கேட்டும் மகிழ்ந்து, பெரிய நம்பி வம்சத்தவர்களாலேயே ஸ்ரீ நம்பி ஸந்நிதி கைங்கரியங்கள் யாவும் நடந்து வரவேண்டும் என்று தீர்மானித்து அருளி,

'' ராமாநுஜார்ய திவ்யாஞ்ஞா,
வர்த்ததாம், அபிவர்த்ததாம் ''

என்றபடியே, 48வது பட்டம் ''கலியன் ராமாநுஜ ஜீயர்'' ஸ்வாமி பரம்பரை வரையிலும், பெரிய நம்பி திருவம்சத்தவர்களிலே நடந்துவருவது ஸகலரும் அறிந்ததே.

ஆகவேதான் ''பேரருளாளன் என்று ஆசாரியர்களால்'' மங்களாசாஸனம் செய்யப்பட்ட

'' கச்சி தேவாதி தேவன், ஸ்வாமிக்கு ஸ்ரீ திருக்கச்சி நம்பி மூலம்'' பூர்வாசார்ய ஸமாச்ரய: என்று

கடைசி ஆறுவது வார்த்தையாக அருளிச் செய்தார் என்று ஸ்வாமி திருவுள்ளங்கொண்டு

''தான், ஸ்ரீ பெரியநம்பியை ஆசாரியராகக்கொண்டு பஞ்ச சம்ஸ்காரம் முதலானதுகள் பெற்றுக்கொண்டார் என்று பெரியோர் பணிப்பர்.

ஸ்ரீ ஸ்வாமி ஆசாரியராக யாரை பற்றுவது என்கிற விசாரம் கொண்டு எழுந்தருளியிந்தார். அதற்கு விடையாக ஆறுவது வார்த்தை தேவாதி தேவனால் அருளிச் செய்யப்பட்டது.

திவ்யதேசங்கள் எல்லாம் மங்கள சாஸனம் செய்து கொண்டு திருநாராயணபுரம், திருநாராணன், செல்வநாரணன், என்ற செல்லப்பிள்ளையை மங்களாசாஸனம் செய்து கொண்டு எழுந்தருளியிருக்கும் போது செல்ல

acharya.org

பிள்ளையின் கைங்கரியத்துக்கு பெரிய நம்பி வம்சத்தில் ஒருவரை அனுப்ப வேணும் என்று ஸ்ரீ பேரருளாள ராமானுஜஜீயருக்கு ஸ்ரீமுகம் அனுப்பியதின் பேரில் திருக்குறுங்குடியிலிருந்து பெரிய நம்பி வம்சத்து ஸ்ரீ வைஷ்ணவர் ஒருவரை ஸ்ரீ பேரருளாள ராமானுஜஜீயர் அனுப்பினார். ஸ்ரீ ஸ்வாமி (எம்பெருமானார்) மிகவும் உகந்து ஷ்டி ஸ்ரீ வைஷ்ணவருக்கு ''திருக்குறுங்குடி தாஸர்'' என்ற அருளிப்பாட்டுடன் செல்வநாரணன் கைங்கரியத்தில் நியமனம் செய்தார்

இன்றும் திருநாராயணபுரத்தில்
''திருக்குறுங்குடி தாஸர்,

என்ற அருளிப்பாட்டுடன் ஸ்ரீ வைஷ்ணவர் கைங்கரியம் செய்து வருவது யாவரும் அறிந்ததே.

எம்பெருமானார் ஸ்ரீ பெரிய நம்பியிடத்தில் பஞ்சஸம்ஸ்காரம் செய்து கொண்டார் எம்பெருமானாராலே பெரிய நம்பி வம்சத்து ஸ்ரீ வைஷ்ணவரான பூர்ணாசாரியருக்கு துரியாஶ்ரமம் கொடுத்து பஞ்சஸம்ஸ்காரம் செய்தும் ஸ்ரீ பேரருளாள ராமானுஜஜீயர் என்ற திருநாமம் சாத்தின பரம்பரையில் பஞ்ச ஸம்ஸ்காரம் செய்து கொள்வது மிகவும் உகந்தது;

அம்புவியோரித் தரிசனத்தை எம்பெருமானார் வளர்த்தார் என்றபடி ஸ்ரீஸ்வாமி எம்பெருமானாரின் அபராவதாரமான ஸ்ரீமத் வரவரமுனி - ஸ்ரீ ஸ்வாமி எம்பெருமானார் பக்கல் ஸச்சிஷ்யனாக நின்று மந்த்ரோபதேசம் பெற்று ''ஸ்ரீ வைஷ்ணவ நம்பி'' என்ற தாஸ்ய நாமம் பெற்ற ''தென்குறுங்குடி'' பேரருளாளனை மங்களா சாஸனம் செய்ய திருவுள்ளங் கொண்டு 18வது பட்டம் ஸ்ரீ ந்ருஸிம்ஹயோகி ஸ்வாமி எழுந்தருளியிருக்கிற காலத்தில் வைஷ்ணவவாமனத்துக்கு எழுந்தருளி ஸ்ரீ நம்பியை

acharya.org



ஸ்ரீ ஸ்வாமி எம்பெருமானாரும்
முதலாவது ஸ்ரீ பேருளாள ராமானுஜ ஜீயர் ஸ்வாமியும்

acharya.org

மங்களாசாஸனம் செய்தருளிக் கொண்டும் க்ரந்த காலக்ஷேபங்கள் சாதித்து கொண்டு சிலநாள் எழுந்தருளி இருந்தார்.

18-வது பட்டம் ந்ருஸிம்ஹயோகி "ஸ்வாமி சாய லொடு மணிமாமை தளர்ந்தேன்" என்றபடி தளர்ச்சி அடைந்ததும் தன் அந்தரங்கரான திருவேங்கட தாஸர் என்ற ஸ்ரீ வைஷ்ணவருக்கு 19வது பட்டமாக ஆஸ்ரம ஸ்வீகாரம் ஸ்ரீ ந்ருஸிம்ஹயோகி ஸ்வாமியால் செய்து வைத்து விஷ்ணுசித்த ஸ்வாமி என்ற திருநாமம் சாத்தி அனுக்ரஹித்தும் சில நாள் க்ரந்த காலக்ஷேபங்கள் சாதித்துக் கொண்டிருந்து நாச்சியார் திருமாளிகைக்கு (ஸ்ரீ-வி) எழுந்தருளினர் ஸ்ரீ மணவாள மாமுனி

தொல்லை மாதவத் தோன்றிய தோமிலாக்கன்றி
நல்ல மாதவன் நளின் பொற்பாதம் நலுகுறுமோ
வல்லமேலவர்க்கல்லது வரவரமுனிதாள்
சொல்லுமாட்சிமை சொல்லவும் வருங்கலோ
சொல்வீர்

பாத்மோத்தரத்து பரத்வவேதனை படலத்தில் உள்ள அப்பாடல்

"கலியும் கெடும் கண்டு கொண்மின்"

என்ற எம்பெருமானார் திருவவதாரத்தை நம்மாழ்வார் முன்னமே அருளினதுபோல், மாமுனிகளின் பெருமையை பரவாசுதேவன் அருளியுள்ளார்.

ஆதாரம் : ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்ஸனம் 275.

acharya.org



ஸ்ரீமத் பரமஹம்ஸ இத்யாதி
ஸ்ரீ பேரருளாள ராமானுஜ ஜீயர் ஸ்வாமி

முதலாவது பட்டம்

லக்ஷ்மீநாதாதிபூர்ணார்ய யதீந்த்ராவதி ஸம்ஶ்ரியம் ।
ததீயகருணாபாத்ரம் ராமாநுஜ முநிம் பஜே ॥

1வது ஜீயர் ஸ்வாமி
திருநக்ஷத்திரம் சித்திரையில் திருவோணம்

வாழித்திருநாமம்

சீராருஞ் செங்கமலச் சேவடிகள் வாழி
திருவரையில் சாத்தியசெந் துவராடை வாழி
ஏராருந் திருமார்பில் முந்நூலும் வாழி
எதிராச ரருளியசீர் முக்கோலும் வாழி
தாராருஞ் சங்காழித் தடந்தோள்கள் வாழி
தடமலர்க்கண் ணிணையொளிரும் முகச்சோதி வாழி
ஆரார்வத் தழகுசிங்க ரடிதொழுவோன் வாழி
அருள்புரியுங் குறுங்கைமுநி யனவரதம் வாழி.

ஆராமம் சூழ்குறுங்கை யாளவந்தோன் வாழியே
அழகார்சித் திரையோணத் தவதரித்தான் வாழியே

acharya.org

பாராரும் பதின்மர்பதம் பணிந்துய்ந்தோன் வாழியே
பாடியத்தி னுட்பொருளைப் பகர்ந்தளிப்போன் வாழியே
சீராருங் குருங்கைகாம்பி திருவருளோன் வாழியே
செல்வ நாரணன்சேவை செய்துகப்போன் வாழியே
எராரும் எதிராச ரிணையடியோன் வாழியே
எந்தைபே ரருளாள மாமுனிவன் வாழியே

நாட்பாட்டு

நீரார் செஞ்சடை யானொடு பங்கயன் நின்று
பணிந்திடுநாள்
நிதமுழல்பாமரர் பாகவதோத்தமர் நீர்மைபொருந்திடு
நாள்
பாரார் செந்தமிழ் மாமறைபயில்வோர் பரிதியெனத்
திகழ்நாள்
பரமதகுஞ்சா பஞ்சானனமாய்ப் பாரில் விளங்கிடுநாள்
சீரார்குறுங்குடி மாநகர்நம்பியும் தேசுபொலிந்திருநாள்
சிறந்த பெரும்பூ தூர்முனி வன்புகழ் சேர்ந்துவிளங்கிடு
நாள்
பேரருளாள ரா மாநுஜஜீயரின் பெருமைவிளங்கிடுநாள்
பிறங்கியமேடந் திகழ்திருவோணப் பேர்பெறு திருநாளே

2-வது பட்டம்

ஸ்ரீ நர நாராயண ஸ்வாமி
கொல்லம் ஆண்டு 274

திவ்ய தேசத்து முக்கியமான உத்ஸவம் கைசிகத்துக்கு கைசிக மண்டபம் நிர்மாணித்தார். 25- சாதுர்மாஸ்யம் எழுந்தருளியிருந்தார்.

acharya.org

பரம்பரைத் தனியன்

ராமா நுஜபதாஸக்தகுருங்கமுநிஸேவிதம் ।
வேதாந்தோபயவக்தாரம் ராமாநுஜமுநிம் பஜே ॥

இவர் திருநக்ஷத்திரம் ஆடி மீ அஸ்விநி

வாழித்திருநாமம்

அடியவர்கள் துயரனைத்தும் அகற்றுவிப்போன் வாழியே
ஆடிதனி லசுவதிநாள் அவரித்தான் வாழியே
கடிபொழில்சூழ் குறுங்கைநம்பி கழல்பணிந்தோன் வாழியே
கைசிகமண்டபம் செய்து களித்துய்ந்தான் வாழியே
திடமாக சிந்துஅனை செய்வித்தான் வாழியே
ஸ்ரீ பூர்ணமுநிபதத்தைத் தினந்தொழுவோன் வாழியே
வடமொழியினுட்பொருளை வகுத்துரைப்போன் வாழியே
வரு நரநாரணமுனிவன் மலர்ப்பதங்கள் வாழியே.

3-வது பட்டம் ஸ்ரீ க்ஷீராப்திபூர்ண ஸ்வாமி

பரம்பரைத் தனியன்

குருங்கமுநிஸத்பக்தம் தத்த்வத்ரிதயபோதிநம் ।
ஜ்ஞாநபக்த்யாதி ஜலதிம் ராமா நுஜமுநிம் பஜே ॥

இவர் திருநக்ஷத்திரம் பங்குனி மீ ரேவதி

வாழித்திருநாமம்

பாராரு மெதிராசர் பதம்பணிந்தோன் வாழியே
பங்குனியில் ரேவ்திநாள் பாருதித்தான் வாழியே
நாரா யணனடியோர் நண்ணுமவன் வாழியே
நான்மறையி னுட்பொருளை நன்குரைப்போன் வாழியே

acharya.org

சீராரும் மாறனடி சிந்தைசெய்வோன் வாழியே
சிரிநாராயண்முநியைத் தினந்தொழுவோன் வாழியே
ஏராரும் குறுங்கேசர்க் கின்பாளன் வாழியே
எழில்திருப்பாற் கடல்நம்பி முநியடிகள் வாழியே.

4-வது பட்டம் ஸ்ரீ வரதயோகி ஸ்வாமி

பரம்பரைத்தனியன்

ஸித்தாஸ்ரீமமுநிப்ராப்த வேதாந்தயுகளார்த்தகம்
வைராக்யாதிகுணோபேதம் ராமாநுஜமுநிம் பஜே ||
இவர் திருநக்ஷத்திரம் புரட்டாசி மீ கார்த்திகை

வாழித்திருநாமம்

கன்னிதனில் கார்த்திகைநாள் கலந்துதித்தான் வாழியே
காதலுடன் அருளாளர் கழல்பணிந்தோன் வாழியே
மன்னுறுசீர் குறுங்கைநம்பி வளமுரைப்போன் வாழியே
மலர்ப்புயமும் முக்கோலும் மணிவடமும் வாழியே
பன்னுகலை நால்வேதம் பகுத்துரைப்போன் வாழியே
பார்புகழும் பாடியத்தைப் பகர்ந்தளிப்போன் வாழியே
மன்னியபாற் கடல்முனிவன் மலரடியோன் வாழியே
வரதார்ய மாமுனிவன் மலர்ப்பதங்கள் வாழியே.

5-வது பட்டம் ஸ்ரீ ஸைலபூர்ண ஸ்வாமி

பரம்பரைத்தனியன்

ஸ்ரீ குருங்கமுநிச்ரேஷ்டக்ருபாபாத்ரம் தயாம்புதிம்
ஸர்வசாஸ்தார்த்ததத்த்வஜ்ஞம் ஸேவே ராமாநுஜம் முநிம்

திருநக்ஷத்திரம் ஆவணி மீ புனர்பூசம்

acharya.org

வாழித்திருநாமம்

அருளாள மாமுனிவ னடியிணையோன் வாழியே
ஆவணியில் புனர்பூச மவதரித்தான் வாழியே
தெருளாரும் எதிராசர் சேவடியோன் வாழியே
செல்வநாரணன்செல்வம் திருத்திவைத்தான் வாழியே
மருள்கடியும் வரதமுனி மலரடியோன் வாழியே
மாலடியார்க்காழிசங்கம் மகிழ்ந்தருள்வோன் வாழியே
பொருளார்ந்த குருங்கைநகர் புண்ணியனார் வாழியே
புகழ்சைல பூர்ணமுனி பொன்னடிகள் வாழியே

6-வது பட்டம் ஸ்ரீ பராங்குச ஸ்வாமி

பரம்பரைத்தனியன்

வாமநாஸ்ரீமயோகீந்த்ரலப்தஜ்ஞாநகுஞ்ஜோதயம்
தத்த்வஸாரார்த்தவக்தாரம் வந்தே ராமாநுஜம் முநிம்
திருநக்ஷத்திரம் ஆவணி மாதம் திருவாதிரை

வாழித்திருநாமம்

தொண்டர்களுக் குபதேசம் தொகுத்துரைப்போன் வாயே
தொல்புகழ் சீ பாடியத்தைத் துலக்கிவைத்தான் வாழியே
அண்டர்புகழ் அழகுசிங்க ரடிபணிவோன் வாழியே
ஆவணியி லாதிரைநாள் அவதரித்தான் வாழியே
எண்டிரையும் புகழ்குருங்கை இசைந்துகந்தான் வாழியே
எழில்சைல பூர்ணரடி மிறைஞ்சுமவன் வாழியே
தண்டமில்நூல் தத்த்வார்த்தம் தானுரைப்போள் வாழியே
சடகோபமாமுனிவன் தாளிணைகள் வாழியே

acharya.org

7-வது பட்டம் ஸ்ரீ சைலார்யஸ்வாமி

பரம்பரைத்தனியன்

ஸித்தா ஸ்ரீமயதிஶ்ரேஷ்டபா தபங்கேருஹாஶ்ரயம்
ச்ருத்யந் தார்த்தப்ரதாதரம் ராமாநுஜமுநிம் பஜே
திருநக்ஷத்திரம் புராட்டாசி மீ பூசம்

வாழித்திருநாமம்

பூவளருந் திருவருளால் பொலிந்தசெல்வன் வாழியே
பொய்கைமுதல் பதின்மர்கலைப் பொருளுரைப்போன் வாழியே
ஏர்வளரும பூதூரரார் இணையடியோன் வாழியே
யதிசடகோபன் கழலை ஏத்துமவன் வாழியே
காவளருங் குறுங்கைநம்பி கழல்பணிந்தோன வாழியே
கன்னிதனில் பூசநாள் கலந்துதித்தான் வாழியே
தேவளரும் எட்டெழுத்தைச் சிந்தை செய்வோன் வாழியே
கிரிசைலமாமுனிவன் திருவடிகள் வாழியே,

8-வது பட்டம் ஸ்ரீ கிருஷ்ணயோகிஸ்வாமி

பரம்பரைத்தனியன்

குருங்கயோகிபா தாப்ஜப்ருங்கம் பாஷ்யார்த்தஸம்விதம்
சமாதிகுணஸமாநம் பஜே ராமாநுஜம் முநிம்
திருநக்ஷத்திரம் ஐப்பசி உத்தராடம்

வாழித்திருநாமம்

அருளாள யோகிபத மாசரிப்போன் வாழியே
ஐப்பசியிலுத்தராடத் தவதரித்தான் வாழியே
தெருளாரும் எதிராசர் சேவடியோன் வாழியே

acharya.org

திருக்கையும் முக்கோலும் திருமுகமும் வாழியே
பொருளாரும் குறுங்கைநகர் புரக்கவந்தான் வாழியே
புரிநூலும் மணிவடமும் பொலிமார்பும் வாழியே
அருளார்ந்தபங்கயத்தாள் அடிதொழுவோன் வாழியே
அனவரதம் கிருஷ்ணமுநி யடியிணைகள் வாழியே.

9-வது பட்டம் ஸ்ரீ சடகோபராமாநுஜஸ்வாமி

பரம்பரைத்தனியன்

ஸ்ரீமத்குருங்கயதிர்வாயபதாப்ஜப்ருங்கம்
வேதாந்தயுக்மவிலஸத்த்ருதயாவபோதம்
ஸ்ரீபாஷ்யபங்கஜரவிம் கருணாநிவாஸம்
ராமாநுஜம் முநிவரம் ஹ்ருதயே பஜாம :

திருநக்ஷத்திரம் பங்குனி மீ திருவாதிரை

வாழித்திருநாமம்

பார்புகழும் கிருஷ்ணமுனிபதம்பணிவோன் வாழியே
பங்குனியி லாதிரைநாள் பாருதித்தான் வாழியே
சீர்சிறந்த திருநாமத் திருநுதலும் வாழியே
செய்பொனெழி லாடையணி திருவரையும் வாழியே
ஏர்திகழும் திருமார்பும் புரிநூலும் வாழியே
எழில்விளங்கு முக்கோலும் இருபுயமும் வாழியே
தார்நிறையும் குறுங்கைநகர் தழைக்கவந்தோன் வாழியே
சடகோபமாமுனிவன் தளிரடிகள் வாழியே.

10-வது பட்டம் கலியன் ராமாநுஜஸ்வாமி

பரம்பரைத்தனியன்

ஸ்ரீமத்குருங்கபுரயோகிபதாரவிந்த
த்வந்த்வப்ரமந்மதுகரம் விலஸத்குணாட்யம்

acharya.org

ச்ருத்யந்தஸாகர தரங்கிதஸந்மநீஷம்
ஸ்ரீராமாநுஜம் முநிவரம் கலயே ஸதாஹம்

திருநக்ஷத்திரம் தை மாதம் பூசம்

வாழித்திருநாமம்

மாலரங்கரடியிணையை மன்னுமவன் வாழியே
மகரத்தில் பூசநாள் வந்துதித்தான் வாழியே
சீலமிகுசடகோபர் சீருரைப்போன் வாழியே
செகத்தலத்தில் தென்குருங்கை சிறக்கவந்தோன் வாழியே
நாலிரண்டும் ஆறைந்தும் நமக்குரைத்தான் வாழியே
நம் சடகோ பன்முனியை நண்ணுமவன் வாழியே
காலமெலாம் அருளாளர் கழல்பணிவோன் வாழியே
கலிகன்றிமாமுனிவன் கழலிணைகள் வாழியே

11-ஆவது பட்டம் ஸ்ரீ தெய்வநாயகஸ்வாமி

பரம்பரைத்தனியன்

குருங்கயோகிபாதாப்ஜத்வந்தவஸ்ஸக்தமாநஸம்
த்ரய்யந்தார்த்தோபதேஷ்டாரம் பஜே ராமாநுஜம் முநிம்

திருநக்ஷத்திரம் ஆடி மாதம் ரோஹிணி

வாழித்திருநாமம்

அன்பர்களுக்காழிசங்க மளித்தருள்வோன் வாழியே
ஆடிதன்னில் ரோஹிணிநாள் அவதரித்தான் வாழியே
பொன்னிறையும் குறுங்கைநம்பி புகழுரைப்பேன் வாழியே
பூதூரரார் மலர்ப்பதத்தைப் போற்றிசெய்வோன் வாழியே
இன்பமுடனரியனாய் இங்குதித்தான் வாழியே
எங்கள் கலின்றிமுனி யிணையடியோன் வாழியே

acharya.org

தென்குறுங்கை நகர் தன்னில் சிறக்கவந்தோன் வாழியே
தெய்வநாயகமுனிவன் சேவடிகள் வாழியே

12-வது பட்டம் ஸ்ரீபேராபுரீசஸ்வாமி

பரம்பரைத்தனியன்

ஸ்ரீ மத்குருங்கமுநிவர்யபதாப்ஜஸேவா
ஸம்ப்ராப்தபாஷ்யவகுளாபரணாதிஹாஸக்திம்
ஸாந்த்யா திஸத்குணநிபிவிபுதைகவந்த்யம்
ராமாநுஜம் முநிவரேண்ய மஹம் பஜாமி
திருநக்ஷத்திரம் ஆவணி மாதம் சதயம்

வாழித்திருநாமம்

ஆவணியில் சதயத்தில் அவதரித்தான் வாழியே
அருள்தெய்வநாயகன்றன் அடிபணிந்தோன் வாழியே
பாவளரும் பராங்குசர்நூல் பரிந்துரைப்போன் வாழியே
பாடியத்தி னுட்பொருளைப் பகர்ந்தளிப்போன் வாழியே
பூவுலகில் எதிராசன் பொன்னடியோன் வாழியே
புகழ்வளரும் குருங்கைநகர் போந்துகந்தான் வாழியே
தேவேசமாமுனியைச் சிந்தைசெய்வோன் வாழியே
திகழ்கொள் குழைக்கர்தமுனி திருவடிகள் வாழியே

13-வது பட்டம் ஸ்ரீ ராகவயோகி ஸ்வாமி

பரம்பரைத்தனியன்

ஸ்ரீமத்குருங்கயதிராஜமதாப்ஜஸேவம்
தத்த்வத்ரயார்க்க விகஸத்த்ருதயாபுஜாதம்
வைராக்யபக்தி ஜிதஷட்கணமார்யபூஜ்யம்
ராமாநுஜம் யதிவரம் ஸததம் பஜாமி
திருநக்ஷத்திரம் சித்திரைமாதம் திருவோணம்

acharya.org

வாழித்திருநாமம்

சீர்சிறந்த குறுங்கைநகர் சிறக்கவந்தோன் வாழியே
சித்திரையிற்றிருவோணம் செகத்துதித்தான் வாழியே
மார்பில்வளர் மாமலராள் வளமுரைப்போன் வாழியே
மறனெறில் தமிழ்ப்பொருளை வகுத்துரைப்போன் வாழியே
பார்கொள் குழைக்காதமுனி பதம்பணிந்தோன் வாழியே
பரம்பொருளின் வசனநூல் பகர்ந்துரைப்போன் வாழியே
மார்பிலங்கு புரிநூலும் மணிவடமும் வாழியே
மன்னு மிராகவமுனிவன் மலரடிகள் வாழியே

14 வது பட்டம் ஸ்ரீ வீரராகவயோகிஸ்வாமி

பரம்பரைத்தனியன்

ஸ்ரீஸித்தாஸ்ரமயோகிவர்யசரண
த்வந்த்வாரவிந்தாஸ்ரயம்
தீபக்த்யாதி குணைததிம் புதஜனை
ராஸேவிதாங்க்ரித்வயம்!
வேதாந்தத்வயலப்தபோதவிலஸத்
சித்தம் ப்ரபந்நாக்ரகம்
ஸ்ரீராமாநுஜயோகிராஜமமலம்
ஸேவே ஸதாஸத்குரும்!!

திருநக்ஷத்திரம் ஆவணி-மீ பூரம்

வாழித்திருநாமம்

அன்பர்களுக் குபதேசம் அருளுமவன் வாழியே
ஆவணியில் பூரத்தில் அவதரித்தான் வாழியே
இன்பமுடன் ஆரியனாய் அவதரித்தான் வாழியே
எதிராசனிணையடியை யிறைஞ்சுமவன் வாழியே
பொன்திகழும் சிங்கரடி போற்றுமவன் வாழியே
புகழ்கொளிராகவமுனிவன் பொன்னடியோன் வாழியே
செம்பொன்மதிள்சூழ்குறுங்கை செழிக்கவந்தோன்
ஸ்ரீ வீரராகவன்றன் திருவடிகள் வாழியே. [வாழியே

acharya.org

15-ஆவது பட்டம் திருவேங்கடராமாநுஜஸ்வாமி

பரம்பரைத்தனியன்

குருங்கமுநிபாதாப்ஜராஜஹம்ஸாயிதாந்தரம்
பஞ்சமோபாய தத்த்வஜ்ஞும் ராமாநுஜமுநிம் பஜே

திருநக்ஷத்திரம் மார்கழி-மீ பூரம்

வாழித்திருநாமம்

மன்னுபுகழ் குறுங்கைநகர் வளரவந்தோன் வாழியே
மார்கழியில் பூரத்தில் வந்துதித்தான் வாழியே
தோன்றுபுகழ் மாமறைநூல் துதிக்கவல்லோன் வாழியே
தொல்வீரராகவன்றன் துணையடியோன் வாழியே
மன்னுலகில் புகழ்படைத்த மாமுனிவன் வாழியே
மாறனுரை பொருள்தன்னை மகிழ்ந்துரைப்போன் வாழியே
பன்னுகலை நால்வேதம் பயிலுமவன் வாழியே
பார்புகழ் வேங்கடமுனிவன் பதமிரண்டும் வாழியே

16-ஆவது பட்டம் சேஷாத்ரிவாஸஸ்வாமி

பரம்பரைத்தனியன்

வாமநாஶ்ரீமயோகீந்தரலப்தவேதாந்தபாரகம்!
ஜ்ஞாநாதிகுணஸம்பூர்ணம் ராமாநூஜமுநிம் பஜே!!

திருநக்ஷத்திரம் தை-மீ அவிட்டம்

வாழித்திருநாமம்

மகிழ்மாறனுரைப்பொருளை மகிழ்ந்துரைத்தான் வாழியே
மகரத்தி லவிட்டநாள் வந்துதித்தான் வாழியே
புகழ்பெருகுங் குறுங்கைநகர் போந்துகந்தான் வாழியே
பூதூரர் அடியிணையைப் புகழ்ந்துய்ந்தான் வாழியே
இகழ்வின்றி யெண்டிசையு மிறைஞ்சுமவன் வாழியே
எழில்கொள்வேங்கடமுனிவ னிணையடியோன் வாழியே

acharya.org

திகழ்திருமந்திரப்பொருளைத் தெளிந்துரைப்போன் வாழியே
சேஷாத்ரிவாஸமுநி திருவடிகள் வாழியே.

17-ஆவது பட்டம் ஸ்ரீ பட்டநாதஸ்வாமி

பரம்பரைத்தனியன்

ஸ்ரீமத்ஸித்தஸ்ரீ மாவாஸயதீந்த்ரபதஸம்ஸ்ரீயம்!
சரமார்த்தப்ரதாதாரம் ஸேவே ராமாநுஜம் முநிம்!!

திருநக்ஷத்ரம் மாசிமாஸம் மகம்

வாழித்திருநாமம்

மன்னுபுகழ் வேதியர்கள் மனம்மகிழ்வோன் வாழியே
மாசியினில் மகந்தன்னில் வந்துதித்தான் வாழியே
பன்னுகலை நால்வேதம் பயின்றுரைப்போன் வாழியே
பார்புகழும் குருங்கைநகர் பரிந்துகந்தான் வாழியே
துன்னுசே ஷாத்ரிமுனி தாளிணையடியோன் வாழியே
தொண்டர்களுக்காழிசங்கம் த்வரித்தளிப்போன் வாழியே
இன்னுமெங்கும் ஆரியர்கள் ஏத்துமவன் வாழியே
எழில்பட்ட நாதமுனி யிணையடிகள் வாழியே.

18-ஆவது பட்டம் ஸ்ரீ நரஸிம்ஹயோகிஸ்வாமி

கொல்லம் ஆண்டு 616

ஸ்ரீமணவாளமாமுனி திருக்குருகூர் இருந்து ஸ்ரீ வைஷ்ணவநம்பி மங்களாசாஸனத்துக்கு வாமனகுடிக்கு எழுந்தருளினார் மங்களாசாஸனம் செய்து கொண்டு சிலகாலம் க்ரந்த காலக்ஷேபங்கள் சேவித்துக்கொண்டு எழுந்தருளியிருந்தார் திருவேங்கட தாஸர் என்பவரை 19-வது பட்டத்துக்கு க்ருபை பண்ணியருளினார்

பரம்பரைத்தனியன்

ஸித்தாஸ்ரீமஸ்தயோகீந்த்ரபரதாம்புஜநிஷேவிணம்!
ஸ்ரீ பூர்ணகருணா லக்ஷ்யம் ராமாநுஜமுநிம் பஜே!!

திருநக்ஷத்ரம் சித்திரைமாஸம் அவிட்டம்

acharya.org

வாழித் திருநாமம்

திருவிருந்த செங்கமலச் சேவடிகள் வாழியே
சித்திரையி லவிட்டத்தில் செகத்துதித்தான் வாழியே
இருமறையினுட்பொருளை எடுத்துரைப்போன் வாழியே
எங்கள் எதிராசனடி யிறைஞ்சுமவன் வாழியே
வருபுகழ்சேர் குறுங்கை நகர் வந்துதித்தான் வாழியே
மகிழ்பட்டநாதமுனி மலரடியோன் வாழியே
திருமகள் தன் சீரருளால் சிறந்தசெல்வன் வாழியே
ஸ்ரீநரசிங்கார்யமுனிசேவடிகள் வாழியே

19-வது பட்டம் ஸ்ரீவிஷ்ணு சித்தஸ்வாமி
கொல்லம் ஆண்டு 637

ஸ்ரீமத்வரவரமுநிபக்கலிலே க்ரந்தாதி காலக்ஷேபம் சேவித்து கொண்டார்

ஸ்ரீஸ்வாமி நம்பிஸன்னதியில் திருப்பணிகள் செய்யும்படி நியமனம் செய்துவிட்டு ஸ்வாமி மணவாளமாமுனி நாச்சியார் திருமாளிகைக்கு எழுந்தருளினர்

பரம்பரைத் தனியன்

உபஸதமகபூமியோகிபாதாப்ஜசித்தம்
வரவரமுநிலப்தத்ராவிடாப நாயசீர்ஷம்!
துரிததிமிரஸூர்யாம் நௌமி ராமாநுஜாக்யம்
முநிவர மகிலேட்யம் ஸத்குணநாம் நிவாஸம்!!

திருநக்ஷத்ரம் வைகாசீ அனுஷம்

வாழித்திருநாமம்

வையகத்தில் மகிழ்மாறன் வளமுரைப்போன் வாழியே
வைகாசி அனுடத்தில் வந்துதித்தான் வாழியே
பொய்கைமுதல் பதின்மர்களைப் பொருளுரைப்போன் வாழியே
புகழ் வளரும் வரமுனியைப் போற்றுமவன் வாழியே

acharya.org

ஸ்ரீ நரஸிம்ஹ யோகி
ஜீயர் ஸ்வாமி 18வது பட்டம்
திருக்குறுங்குடி மடம்.

ஸ்ரீ மணவாள மாமுனி

ஸ்ரீ விஷ்ணு சித்த
ஜீயர் ஸ்வாமி 17வது பட்டம்
திருக்குறுங்குடி மடம்.

acharya.org
Srivastsam

தெய்வநம்பிதிருக்குறுங்கை செழிக்கவந்தோன் வாழியே
ஸ்ரீநரஸிங்கார்யமுனி சேவடியோன் வாழியே
உய்யவே உலகெல்லா முகந்துவந்தான் வாழியே
ஊழிதொறும் விஷ்ணுசித்த மாமுனிவன் வாழியே.

20-ஆவது பட்டம் ஸ்ரீ ரங்கநாத ஸ்வாமி

பரம்பரைத் தனியன்

ஸ்ரீஸித்தாஸ்ரீம் யோகீந்த்ரகுணைம்ருதபாஜநம!
சேதநோஜ்ஜீவநே தக்ஷம் ராமாநுஜமுநிம் பஜே!!

திருநக்ஷத்திரம் வைகாசி மீ திருவோணம்

வாழித் திருநாமம்

மாவளரும் பொழிற்குறுங்கை வாழவந்தோன் வாழியே
வைகாசித் திருவோணம் வந்துதித்தான் வாழியே
பூவளரும் திருமகளார் புகழ்ந்தசெல்வன் வாழியே
புகழ் விஷ்ணுசித்தமுனி பொன்னடியோன் வாழியே
பாவளரும் பாஷியத்தை பகர்ந்தளிப்போன் வாழியே
பராங்குசனுரடியிணையைப் பணியுமவன் வாழியே
சீர்வளரும் யதிவரனைச் சிந்தைசெய்வோன் வாழியே
ஸ்ரீரங்கநாதமுனி திருவடிகள் வாழியே

21-ஆவது பட்டம் ஸ்ரீகுருங்கபூர்ண ஸ்வாமி

பரம்பரைத் தனியன்

ஸ்ரீமத் குருங்கமுநிபுங்கவபாதஸக்தம்
ஸ்ரீகாந்தபூர்ணகுணஸக்த மநோபிராமம்!
ஸ்ரீபாஷ்யதத் த்வவித மார்ய முதாரபாவம்
ராமாநுஜாக்ய முநிவர்யமஹம் பஜாமி!!

திருநக்ஷத்ரம் ஆனி மீ கேட்டை

acharya.org

வாழித் திருநாமம்

அரும்பொன்சேர்குறுங்குடியை யாளவந்தேன் வாழியே
ஆனிதனில் கேட்டை நன்னாள் அவதரித்தான் வாழியே
தெருள்வளரும் அரங்கமுனி திருவாடியோன் வாழியே
ஸ்ரீவசன பூஷண நூல் தெளிந்துரைப்போன் வாழியே
அருள்சுரந்தே யடியவர்பால் அன்பானன் வாழியே
அனவரதம் அழகுசிங்க ரடிபணிவோன் வாழியே
இருள்கடியும் எதிராசனியல்பருள்வோன் வாழியே
எந்தை குருங்கை பூர்ணமுநி யிணையடிகள் வாழியே

22-வது பட்டம் ஸ்ரீசோரநாத ஸ்வாமி

பரம்பரைத்தனியன்

ஸ்ரீவாமநகுடீயோகி பாதாம்புஜஸமாஸ்ரீயம் !
நிகமாந்தார்த்த தத்த்வஜ்ஞம் பஜே ராமாநுஜம் முநிம்!!
திருநக்ஷத்ரம் ஆவணி மீ" ரேவதி

வாழித்திருநாமம்

சீர்மருவும் திருக்குறுங்கை செழிக்கவந்தோன் வாழியே
சிங்கத்தில் ரேவதிநாள் சிறக்கவந்தோன் வாழியே
பார்மருவும் பூர்ணமுனி பதம்பணிவோன் வாழியே
பராங்குசனின் பனுவல்களைப் பகருமவன் வாழியே
கார்மருவும் குறுங்கைநம்பி கழல்பணிவோன் வாழியே
கலிகன்றி கூற்றிருக்கைக் கருத்தளிப்போன் வாழியே
ஏர்மருவும் திருமார்பும் இலங்குமுந்நூல் வாழியே
எழில்சோரநாத முனியிணையடிகள் வாழியே

23-வது பட்டம் ஸ்ரீராமமிஸ்ரீ ஸ்வாமி

பரம்பரைத்தனியன்

ஸ்ரீ ஸித்தரச்ரமயோகிராஜகருணா
ஸம்ஸித்த போதோஜ்ஜ்வலம்

acharya.org

தீபக்த்யாதி குணைததிம் சடவிஜித்
ஸுக்த்யர்த்த ஸந்தாயிநம் !
ஸ்ரீ ராமாநுஜயோகிஸுக்தி விசதீ
காரப்ரவீணம் ஸதா
ஸ்ரீ மல்லக்ஷ்மண யோகிவர்ய மநகம்
காருண்யவார்த்திம் பஜே

திருநக்ஷத்ரம் கார்த்திகை மீ திருவாதிரை

வாழித்திருநாமம்

காதலுடன் குறுங்கைநம்பிகழல்பணிந்தோன் வாழியே
கார்த்திகையிலாதிரைநாள்கலந்துதித்தான் வாழியே
போதமுடன் ஆழ்வார்சொற்பொருளுரைப்போன் வாழியே
பூதூரனடியிணையைப் போற்றுமவன் வாழியே
நேசமுடன் எட்டெழுத்தை நிதமுரைப்போன் வாழியே
நீள் சோரநாதனடி நினைந்துய்வோன் வாழியே
நாதமுனி கவிபோற்றும் நாவீறன் வாழியே
நங்கள் ஸ்ரீ ராமமிச்ர மாமுனிவன் வாழியே

24-வது பட்டம் ஸ்ரீயாமுநார்ய ஸ்வாமி

பரம்பரைத்தனியன்

குருங்கநகரீயோகிசரணம்புஜஷட்பதம்
ஸாக்ஷாத்க்ருதசடாராதிம் பஜே ராமாநுஜம் முநிம்

திருநக்ஷத்ரம் புரட்டாசி மீ பரணி

வாழித்திருநாமம்

செஞ்சொல்மறை புகழ்குறுங்கை செழிக்கவந்தோன்
வாழியே
சிறந்தகன்னி பரணிதன்னில் செகத்துதித்தான் வாழியே

acharya.org

வஞ்சமிலர் நெஞ்சுடையார் வாழ்த்துமவன் வாழியே
வசனபூஷணப்பொருளை வகுத்தருள்வோன் வாழியே
அஞ்சொல்வர யோகிபதம் அகமகிழ்வோன் வாழியே
அருள் ராமமிஸ்ரமுநி யடிபணிந்தோன் வாழியே
கஞ்சமகள் திருவருளைக் கருதுமவன் வாழியே
கருணை யாமுநமுனிவன் கழலிணைகள் வாழியே

முக்கிய கவனிப்பு ;

திவ்யதேசங்களிலும் மற்றும் இடங்களிலும். ஆஸ்ரம ஸ்வீகாரம் செய்து கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ஜீயர் ஸ்வாமிகள் விஷயத்தில், துரதிர்ஷ்ட வசமாக ஏதாவது, தவறுகள் நடந்துவிட்டால் அந்த ஸ்தானத்தை மறுபடியும் அலங்கரிக்க எழுந்தருள்பவர்கள் பரமாசாரி யரின் பூர்ணகடாக்ஷம் பெற்றவரும் தேவாதிதேவனுன பேரருளாளனிடம் ஆஸ்ரமஸ்வீகாரம் பெற்றுக்கொண்ட ஸ்வாமி எம்பெருமானுர் பக்கல் ஆஸ்ரம ஸ்வீகாரம், பஞ்சஸம்ஸ்காரம் பெற்றவரும் ஸ்ரீமணவாளமாமுனியின் பூர்ணகடாக்ஷம் பெற்ற ஸ்ரீ பேரருளாள ராமானுஜஜீயர் பரம்பரையில் ஆஸ்ரம ஸ்வீகாரம் வகையரு பெற்றுக்கொண்டு ''தான் ஸ்தானத்துக்கு எழுந்தருள்வது தொன்று தொட்டு வழக்கம்'' அவ்விதமே எழுந்தருளி யிருப்பதாகவும் எழுந்தருளியும் இருக்கிருர்கள் என்றும் கர்ணபரம்பரையாக பெரியோர்களால் வழங்கி வருவது உண்டு

25-வது பட்டம் ஸ்ரீ கூரநாத ஸ்வாமி

பரம்பரைத்தனியன்

ஸித்தா ஸ்ரீமமுநீந்த்ராங்க்ரிஸரோஜப்ரமராந்தரம்
ஜ்ஞாநவைராக்யஸஹிதம் ராமாநுஜமுநிம் பஜே !!
திருநக்ஷத்திரம் ஐப்பசி மீ ரோஹிணி

acharya.org

வாழித்திருநாமம்

அன்னவயல் பூதூர ரடிபணிந்தோன் வாழியே
அருளாள முனிபதத்தை ஆசரித்தோன் வாழியே
பன்னுகலேவேதாந்தம் பயின்றுரைப்போன் வாழியே
பதின்மர்கலே பொருள்கன்தனே பகர்ந்தளிப்போன் வாழியே
மன்னுபுகழ்க் குறுங்குடியை வாழ்வித்தான் வாழியே
மகிழ்யாமுநார்யன்றன் மலரடியோன் வாழியே
துன்னு துலாரோஹிணிநாள் தோன்றினன் வாழியே
தொல்புகழ்க் கூரேசமுனி துணையடிகள் வாழியே

26-வது பட்டம் ஸ்ரீ கோவிந்தார்ய ஸ்வாமி

பரம்பரைத்தனியன்

குருங்கநகரீயோகிசரணத்யாநபாவநம்
த்வயார்த்த கதவாக்சித்தம் ஸேவே ராமாநுஜம் முநிம்!!
திருநக்ஷத்ரம் மார்கழி மீ" பூசம்

வாழித்திருநாமம்

அடியவர்கட் குபதேசம் அளித்தருள்வோன் வாழியே
அன்புடன் மார்கழிப்பூசம் அவதரித்தான் வாழியே
கடிபொழில்சூழ்குறுங்கைநம்பிகழல்பணிந்தோன் வாழியே
கலிகன்றி தமிழ்மறையின் கருத்துரைப்போன் வாழியே
வடமறையின் ஆழ்பொருளே வகுத்துரைப்போன் வாழியே
வண்புகழ் கூரேசமுனி மலரடியோன் வாழியே
இடர்கெடவே யடியவர்கள் இறைஞ்சுமவன் வாழியே
ஏர்புகழ் கோவிந்தமுனி யிணையடிகள் வாழியே.

27-வது பட்டம் ஸ்ரீ மஹாபூர்ணஸ்வாமி

பரம்பரைத் தனியன்

ஸித்தாஸ்ரீ மமுநிப்ராப்த மந்த்ரரத்நார்த்தஸம்பதம்
பூர்ணகைங்கர்ய நிரதம் வந்தே ராமாநுஜம் முநிம்
திருநக்ஷத்திரம் தை மீ" சதயம்

acharya.org

வாழித்திருநாமம்
செண்பகம்சேர் குறுங்கைநகர் செழிக்கவந்தோன் வாழியே
சிறந்த கோவிந்தமுனி சேவடியோன் வாழியே
அன்புடனே யருளாள ரடிபணிந்தோன் வாழியே
அழகாரும் தைச்சதயம் அவதரித்தான் வாழியே
பொன்புரையும் திருவரங்கர் புகழுரைப்போன் வாழியே
புகழ் கொள் வரயோகிதனைப்போற்றுமவன் வாழியே
இன்பமுடனடியவர்கட் கிதமுரைப்போன் வாழியே
எழில் மகாபூர்ணமுனி யிணையடிகள் வாழியே

28-வது பட்டம் சடகோப ராமாநுஜ ஸ்வாமி

பரம்பரைத்தனியன்

யதிராஜக்ருபாபாத்ரகுருங்கமுநி ஸேவிநம்
த்ராவிடாம்நாய தத்த்வஜ்ஞம் ராமாநுஜ முநிம்பஜே

திருநக்ஷத்ரம் கார்த்திகை மீ கார்த்திகை

வாழித் திருநாமம்

கார்த்திகையிற் கார்த்திகை நாள் கலந்துதித்தான் வாழியே
காரிமாறன் தமிழின் கருத்துரைப்போன் வாழியே
பூத்தபொழில் குறுங்கைநகர் புகழுரைப்போன் வாழியே
பொய்கை முதல் பதின்மரடி போற்றிசெய்வோன் வாழியே
ஏத்து புகழ் வரமுனியை யிறைஞ்சுமவன் வாழியே
எழில் மஹா பூர்ணமுனியிணையடியோன் வாழியே
நாற்றிசையும் தொழுதேத்தும் நலமுடையோன் வாழியே
நன்று சடகோபமுனி நல்லடிகள் வாழியே

29-வது பட்டம் ஸ்ரீ கிருஷ்ணயோகி சுவாமி

பரம்பரைத் தனியன்

ஸித்தா ஸ்ரீமஸ்தமுநி புங்கவ பாதசித்தம்
ஜ்ஞாநாதி ஸத்குணகணே பரிபூர்ணபாவம்
ஸ்ரீத்யந்தயுக்மஸ்வகபோதந நிஸ்ஸமாநம்
ராமாநுஜம் யமிவரம் ப்ரணதோஸ்மி நித்யம்

திருநக்ஷத்திரம் புரட்டாசி மீ திருவோணம்

acharya.org

வாழித் திருநாமம்

கன்னிதனில் திருவோணம் கலந்துதித்தான் வாழியே
கமழ்துளவத்தார் நம்பிகருணைபெற்றான் வாழியே
துன்னு சடகோபமுனிதாள் தொழுவோன் வாழியே
தொண்டர்களுக் கமுதூட்டும் சொற்சுவையோன் வாழியே
பன்னுகலை வேதாந்தம் பயிற்றுவிப்போன் வாழியே
பதின்மர்கலை யுட்பொருளைப் பகர்ந்தளிப்போன் வாழியே
அன்னவயல் பூதூ ரடிபணிந்தோன் வாழியே
அழகாரும் கிருஷ்ணமுனி யடியிணைகள் வாழியே

30-வது பட்டம் ஸ்ரீ பரகாலயோகி ஸ்வாமி

பரம்பரைத்தனியன்

ஸ்ரீமத் குருங்கமுநிபாத ஸரோருஹாளிம்
ஸௌம்யோபயந்தரு முதிதர்சந்தூர்வஹேந்த்ரம்
காமாதிதோஷகண தூரக மார்யவர்யம்
ராமாநுஜம் முநிவரம் ப்ரணமாம்யஜஸ்ரம் !!

திருநக்ஷத்ரம் ஐப்பசி மீ சதயம்

வாழித்திருநாமம்

எட்டெழுத்தினுட் பொருளை ஈந்தருள்வோன் வாழியே
இலங்கு துலாச்சதயத்தில் இங்குதித்தான் வாழியே
மட்டவிழும் பொழில்குறுங்கை வாழவந்தோன் வாழியே
வாழ்சரணுகதிப்பொருளை வகுத்துரைப்போன் வாழியே
சிட்டர்தொழும் எதிராசர்சீருரைப்போன் வாழியே
ஸ்ரீகிருஷ்ணமுனிபதத்தைத் தினந்தொழுவோன் வாழியே
அட்டதிக்கும் புகழ்பெற்ற அருளாளன் வாழியே
அண்ணல் பரகாலமுனி யடியிணைகள் வாழியே

acharya.org

31-வது பட்டம் ஸ்ரீ சடகோபராமாநுஜ ஸ்வாமி

பரம்பரைத் தனியன்

ஸ்ரீமத் குருங்கயதிவர்யகடாக்ஷ லப்த
வேதாந்தயுக்மவிசதீகரணப்ரவீணம்
ஸ்ரீகாரிஸூநுயதிராட்வரயோகி பக்தம்
ராமாநுஜம் குணநிதிம் முநிமாஸ்ரீயாம் : !!

திருநக்ஷத்ரம் சித்திரை மீ புனர்பூசம்

வாழித்திருநாமம்

சித்திரையில் புனர்பூசம் சிறக்கவந்தோன் வாழியே
சீர்பெற்ற கலிகன்றி திருவடியோன் வாழியே
பத்தியுடன் வரமுனியைப் பணிந்துய்வோன் வாழியே
பராங்குசரின் நூல்கள்தனைப் பகர்ந்தளிப்போன் வாழியே
எத்திசையும் தொழுதேத்து மிணையடியோன் வாழியே
எதிராச னிணையடியை யேத்துமவன் வாழியே
பத்தர்களுக்குபதேசம் பயின்றளிப்போன் வாழியே
பார்புகழும் சடகோபமுனிபதங்கள் வாழியே

32-வது பட்டம் ஸ்ரீ பட்டர்பிரான் ஸ்வாமி

பரம்பரைத் தனியன்

குருங்கமுநி ஸேவாப்த வேதாந்தார்த்தம் விசக்ஷணம்
ஸௌசீல்பாதி குணாவாஸம் நௌமி ராமாநுஜம் முநிம் !!

திருநக்ஷத்திரம் மாசி மீ திருவோணம்

வாழித்திருநாமம்

மருவாரும் குருங்கை நகர் வாழவந்தோன் வாழியே
மாசிதன்னில் திருவோணம் வந்துதித்தான் வாழியே

acharya.org

திருமார்பும் புரிநூலும் திருமணியும் வாழியே
சீராரும் சடாரிமுனி சேவடியோன் வாழியே
திருவாரும் நம்பிபதம் தினந்தொழுவோன் வாழியே
திருநாம மீராறும் திருநுதலும் வாழியே
அருளாளயோகிபதம் ஆசரித்தோன் வாழியே
அம்புவியில் பட்டநாத முனியிணையடிகள் வாழியே

33-வது பட்டம் ஸ்ரீ கலியன் ராமாநுஜ ஸ்வாமி

பரம்பரைத்தனியன்

வரமநாஸ்ரீமயோகீந்த்ரம் காருண்ய ஜ்ஞாநசேவதிம்
ஸித்தாந்தஸ்தாபநாஸக்தம் பஜே ராமாநுஜம் முநிம் !!

திருநக்ஷத்ரம் ஐப்பசி மீ பூராடம்

வாழித்திருநாமம்

அற்புதமாங் குறுங்குடியை யாளவந்தோன் வாழியே
ஐப்பசியில் பூராடத் தவதரித்தான் வாழியே
இப்புவியில் ஆரியர்கள் ஏத்துமவன் வாழியே
இலங்கு திருவாய்மொழியி னீடுதைப்போன் வாழியே
எப்பொழுதும் வரமுனியை யிறைஞ்சுபவன் வாழியே
எழில்பட்டநாதமுனி யிணையடியோன் வாழியே
மற்பொருதோட்கண்ணனுரை வகுத்துரைப்போன் வாழியே
மங்கையர்கோன் மாமுனிவன்மலர்ப்பதங்கள் வாழியே

34-வது பட்டம் ஸ்ரீ மதுரகவி ஸ்வாமி

பரம்பரைத்தனியன்

ஸ்ரீமத் குருங்கமுநிபுங்கவலப்தத்தத்வம்
தாத்ருத்வமுக்யகுணரத்நமஹாம்புராசிம்

acharya.org

ஸ்ரீமத்ப்ரபந்நஜநதாவநபத்ததீக்ஷம்
ராமாநுஜம் குருவரம் முநிமாசரயாம: !!
திருநக்ஷத்ரம் ஆனி மீ ஸ்வாதி

பரம்பரைத்தனியன்

அன்னவயல் பூதூரர் அடிபணிந்தோன் வாழியே
ஆனிதனில் சோதிநன்னாள் அவதரித்தான் வாழியே
பன்னுகலை நால்வேதம் பயின்றுரைப்போன் வாழியே
பார்புகழும் கலிகன்றிபதம்பணிந்தோன் வாழியே
மன்னுபுகழ் வரமுனியை வாழ்த்துமவன் வாழியே
மார்பிலங்கு புரிநூலும் மணிவடமும் வாழியே
இன்பமுடன் எட்டெழுத்தை யெடுத்துரைப்போன் வாழியே
எங்கள்முனி மதுரகவியிணையடிகள் வாழியே

35-வது பட்டம் ஸ்ரீ ராமானுஜ ஸ்வாமி

957ம் ஆண்டு ஸ்தானத்துக்கு எழுந்தருளினர் 961ம் ஆண்டு பெரியபெருமாளுக்கு படாச்சாதனம் சார்த்தியும் விமான ஸம்ப்ரோக்ஷணமும் நடந்தது

ஜீர்ணமாயிருந்த தெற்கு பெரிய திருமதிலையும் கட்டி திருத்தேர் கைங்கரியமும் செய்தருளினர். 969ம் ஆண்டில் திருவாய்மொழி மண்டபம் மேற்கேயிருந்து ஆரம்பித்து கிழக்கே 12பத்திகள் மண்டபம் கட்டியருளினர் 13 சாதுர்மாஸ்யம் எழுந்தருளியிருந்தார்.

பரம்பரைதனியன்

குருங்கயோகிஸம்ப்ராப்த வேதாந்தோபயஸாரகம்
ஸ்ரீ பூர்ணஸேவாநிரதம் ராமாநுஜமுநிம் பஜே !!
திருநக்ஷத்ரம் சித்திரை மீ சதயம்

acharya.org

35-வது பட்டம்
ஸ்ரீ ராமாநுஜ ஸ்வாமி

acharya.org

36 வது பட்டம்
சடகோப ராமாநுஜ ஸ்வாமி

acharya.org

வாழித்திருநாமம்

சீர்பெருகுந் தென்குறுங்கை சிறக்கவந்தோன் வாழியே
சித்திரையில் சதயநன்னாள் செகத்துதித்தான் வாழியே
பார்புகழுங் குறுங்கைநம்பி ப்ரதிஷ்டை செய்தான் வாழியே
பத்தியுடன் மண்டபம்தேர் பலபணித்தான் வாழியே
தார்திகழும் மணிமார்பும் தடந்தோளும் வாழியே
தாமரைக்கண் ணிணைவிழியும் தண்முகமும் வாழியே
பார்பணியும் மதுரகவி பதம்பணிவோன் வாழியே
பண்புள ராமாநுசமா முனிபதங்கள் வாழியே.

36-வது பட்டம் ஸ்ரீ சடகோபராமானுஜ ஸ்வாமி

982ம் ஆண்டில் 35வது பட்டம் ஸ்வாமியால் கட்டியருளின 12 பத்திக்கு கிழக்கே பரமபதவாசல் வரையிலும் மண்டப கைங்கரியங்கள் செய்தருளினார். பரமபதவாசல் மண்டபத்தில் 35-36வது பட்டம் ஜீயர் ஸ்வாமிகள் திருவுருவம். தூணில் எழுந்தருளியிருப்பதை சேவிக்கலாம்.

8 சாதுர்மாஸ்யம் எழுந்தருளியிருந்தார்.

பரம்பரைத்தனியன்

குருங்கயோகிக்ருபயா சரமார்த்தப்ரதாயிநம்
ஸ்ரீ பூர்ணஸக்தஹ்ருதயம் ராமாநுஜ முநிம் பஜே

திருநக்ஷத்ரம் கார்த்திகை மீ ரோஹிணி

வாழித்திருநாமம்

காசினியில் குறுங்கை நம்பி கழல்பணிந்தோன் வாழியே
கார்த்திகையில் ரோஹிணிநாள் கலந்துதித்தான் வாழியே

acharya.org

தேசிகர்கள் மொழிப்பொருளைந் தெரிந்துரைப்போன்
வாழியே
திகழ்ராமாநுஜமுநிவன் திருவடியோன் வாழியே
வாசமணித்தாழ்வடமும் வளர்மார்பும் வாழியே
வளர்புகழ்சேர் எதிராசர் வளமுரைப்போன் வாழியே
தேசுமிகு மாரியர்கள் செப்புமவன் வாழியே
செகத்தில் சடகோபமுனி திருவடிகள் வாழியே

37-வது பட்டம் ஸ்ரீ பட்டர்பிரான் ஸ்வாமி

பரம்பரைத்தனியன்

குருங்கயோகீந்த்ரபதாந்தரங்கம்
சாந்த்யாதிஸீமாந மநகர்க்கஸீலம்
யதீந்த்ரகோஷ்டிநளிநீமராளம்
நமாமி ராமாநுஜயோகிவர்யம்

திருநக்ஷத்ரம் வைகாசி மீ˚ பூராடம்

வாழித்திருநாமம்

வம்பவிழும் பொழில் குறுங்கை வாழவந்தோன் வாழியே
வைகாசிப் பூராடம் வந்துதித்தான் வாழியே
செம்பொனெழில் திருவாடைத் திருவரையும் வாழியே
சீர்சிறந்த ஈராறு திருநாமம் வாழியே
அம்புவியில் பதின்மர்கலை யாய்ந்துரைப்போன் வாழியே
அருளாளமுனிமடத்தை யலங்கரித்தான் வாழியே
செம்பதுமையாள் திகழும் செல்வனார் வாழியே
ஸ்ரீ பட்டநாதமுனி திருவடிகள் வாழியே

38-வது பட்டம் ஸ்ரீ கலியன் ராமாநுஜ ஸ்வாமி

பரம்பரைத்தனியன்

ஸ்ரீ ஸித்தோடஜ யோகிவர்யகருணா
முக்யாஸ்பதம் ஸத்குரும்

acharya.org

ஸ்ரீமத் ஸுந்தரபூர்ணஸேவநரதம்
தீபக்திசாந்த்யாத்மகம்
வாத்ஸல்யாதி குணப்திமேகசரணம்
ஸ்ரீமத்வசோபூஷண
க்ரந்தார்த்தஜ்ஞவரிஷ்ட மார்ய மதுலம்
ராமாநுஜார்யம் பஜே !!

திருநக்ஷத்ரம் வைகாசி மீ உத்தராடம்

வாழித் திருநாமம்

மந்திரத்தினுட்பொருளை மகிழ்ந்துரைப்போன் வாழியே
மாசிதனில் உத்தராடம் வந்துதித்தான் வாழியே
சந்ததமும் குறுங்கைநகர் தழைக்கவந்தோன் வாழியே
தமிழ்மாறனுரைப்பொருளைத் தானுரைப்போன் வாழியே
எந்தை எதிராசரடி யேத்துமவன் வாழியே
எழில்பட்டநாதமுனி யிணையடியோன் வாழியே
சிந்தைதனில் நம்பிபதம் சிந்திப்போன் வாழியே
திருக்குறுங்கை கலிகன்றி சேவடிகள் வாழியே

39-வது பட்டம் ஸ்ரீ மதுரகவி ஸ்வாமி

பரம்பரைத்தனியன்

ஸ்ரீ மத்வாமநதாமஸம்யமி குரோ:
பாதாப்ஜஸம்ஸேவிநம்
ஸ்ரீ பாஷ்யார்த்தரஸப்ரவர்ஷசீதுரம்
ஸ்ரீ காந்தபூர்ணப்ரியம்
காருண்யாதி ஸமஸ்தமங்களகுணை:
பூர்ணம் ஸதாமுத்தமம்
க்யாதம் த்ரவிடவேதஸாரவித்ருதௌ
ராமாநுஜம் ஸம்ச்ரயே !!

திருநக்ஷத்ரம் வைகாசி மீ விசாகம்

acharya.org

வாழித்திருநாமம்

வையகத்தில் குறுங்கைநகர் வாழவந்தோன் வாழியே
வைகாசி விசாகத்தில் வந்துதித்தான் வாழியே
பொய்கை முதல்பதின்மர்கலைப் பொருளுரைப்போன்
வாழியே
பூதூர்மாமுனிபதத்தைப் போற்றுமவன் வாழியே
செய்யமலர் மணிவடமும் திருவரையும் வாழியே
திருக்கலியன்முனிபதங்கள் தினந்தொழுவோன் வாழியே
துய்யமறைப் பல்பொருளைத் தொகுத்துரைப்போன்
வாழியே
தூய்மைமிகு மதுரமுனி துணைப்பதங்கள் வாழியே

40-வது பட்டம் ஸ்ரீ ராமானுஜ ஸ்வாமி (ராமாயண ஸ்வாமி

ஸ்ரீ ராமாயணத்தில் அதிப்ரவீணராய் கொண்டு விசேஷார்த்தங்கள் சாதிக்கையாலே அதுவே திருபமாக ஸ்ரீ ராமாயண ஸ்வாமி என்று திருநாமமாயிற்று.

திருவரங்கம், திருவணை, திருமலை, திருவயோத்தி யாத்ரை வ்யாஜமாகத் திக்விஜயம் செய்யத் திருவுள்ளம் கொண்டு 14-சாதுர்மாஸ்யம் கழிந்தவாறே ஸ்ரீ நம்பிஸந்நிதிநிர்வாஹத்துக்குக் கடவரான ஸ்ரீ சடகோபராமாநுஜ ஸ்வாமியைத் தம்முடைய ஸ்தானத்தில் கொல்லம் ஆண்டு 1036-ல் நியமித்து யாத்ரைப்பட்டு, ஆங்காங்கே கோயில் கொண்டெழுந்தருளியிருக்கிற எம்பெருமான்களையும், வடநாட்டில் மதுரை துவாரகை சாளக்கிராமம் திருவயோத்தி முதலான திவ்யதேசத்து எம்பெருமான்களையும் மங்களாசாஸனம் செய்து, இதரமதநிரஸனபூர்வகமாக ஸ்வமத ஸித்தாந்த ஸ்தாபனம் செய்து கொண்டு ஏழு சாதுர்மாஸ்யம் யாத்ரையாகவே எழுந்தருளியிருந்தார்.

acharya.org

திருவல்லிக்கேணி எழுந்தருளியதும் திருமேனி அஸக்தமாய் இருந்து திருநாட்டுக்கு எழுந்தருளி விட்டார். அங்கேயே திருப்பள்ளிப் படுத்தினர்கள். திருக்குறுங்குடியில் மடத்தில் சரமகைங்கரியங்கள் விசேஷமாக நடத்தினர்கள்.

திருவல்லிக்கேணியில் திருவரசு இடம் தெரியவில்லை.

பரம்பரைத்தனியன்

ஸ்ரீமத் ஸித்தகுடீரஸம்யமிக்ருபா
ஸம்ப்ராப்தபோதஸ்ரீயம்
ஸ்ரீராமாநுஜதர்சநப்ரவிசதீ
காரைகதீக்ஷரவஹம் :
வேதாந்தத்வயபாரகௌக
மகுடாலங்காரஹீரம் குரும்
ஸ்ரீராமாநுஜயோகிவர்ய மதுலோ
தாரஸ்வபாவம் பஜே !!

திருநக்ஷத்ரம் மாசி மீ" திருவோணம்

வாழித்திருநாமம்

மாசிதனில் திருவோணம் வந்துதித்தான் வாழியே
மறைநான்கி னுட்பொருளை வகுத்தருள்வோன் வாழியே
தேசிகர்கள்மொழிப்பொருளைத்தினமுரைப்போன் வாழியே
ஸ்ரீவசனபூஷணத்தின் சீருரைப்போன் வாழியே
வீசுபுகழ் தேசமெங்கும் வென்றுவந்தான் வாழியே
வேதாந்தமிராமகதை விரித்துரைப்போன் வாழியே
தேசுவளர் ஆறங்கம் தெளிந்துரைப்போன் வாழியே
ஸ்ரீராமாநுசமுனிவன் செகத்தலத்தில் வாழியே

acharya.org

பார்சு பாஷை

இவடம் பட்டாணம் மெஜாதார் ஜாகிதார் பின்னும் கீழான போலீஸ் உத்தியோகஸ்தர்களுக்கு உத்தரவு செய்கிறதுவென்னவென்றால்

இவடத்தில் விஜயமாயிருக்கிற நம்பி நாராயண ராமானுஜ ஜீயர் ஸ்வாமியவர்கள் தீர்த்தயாத்திரையாய் பதிரிகாசிரமம் காசி முதலான ராஜியத்துக்கு இதனடியில் கண்ட மனுஷியாள் சாமான்கள் வாகனாதிகள் ஸகிதம் போகிறபடியால் மார்க்கத்தில் யாதொரு தொந்தரவுகள் நேரிடாமலிருக்கும் பொருட்டு வேண்டிய உதவி செய்து கொடுக்கும்படி கண்டிப்பாய் உத்தரவு செய்யப்பட்டது.

சாமான்கள் விபரம்

யானை 2 மேனா 2 குதிரை 4 வண்டி 6 காளை பசு 5 சிபாய்கள் 15 பிராமணாள் 30 பின்னும் சாமான்கள்.

23 ஜமாதி உல்சானி 1280 இஜிரி ஷூ

(முகர்)

(இங்கிலீஷில்) மொஹன்லால்
என்று கையெழுத்து வைத்திருக்கிறது
1வது அஸிஸ்டண்டு.

அஸல்	1
தமிழ்தர்ஜமா	1
ஆக	2

acharya.org

உருதுபாஷை

இந்த காசிப்பூர் நகரத்திலுள்ள கீழான உத்தியோகஸ்தர்களுக்கும் உ த் த ர வு செய்கிறதென்னவென்றால் தக்ஷிண ராஜ்யத்திலிருந்து விஜயமாயிருக்கிற நம்பி நாராயண ராமாநுஜஜீயர் ஸ்வாமியவர்கள் யிவடத்திலிருந்து கெயா தேசத்துக்கு தீர்த்தயாத்திரை போகிற படியினாலே அவர்களுக்கு பாத்தியப்பட்ட சாமான்களை வழியில் அவரவர் பீர்க்கா எல்கை அனுப்பவேணுமென்பதாய் கண்டிப்பாய் உத்திரவு செய்யப்பட்டது.

சாமான்கள் விபரம்

யானை 2 பல்லாக்கு. 2 பென்னிஸ் 2 குதிரை 15 ஒட்டகை 10 வண்டி 8 வேலைகாரர்களும் ஆள்களும் 155 20 வாத்தியக்காராகள் சேவகன் 16 மருல்ஜிகள்-2
21-3-1852 (முகர்)

இங்கிலீஷ் (பேர் தெரியவில்லை)
கலெக்டர்

(இனிஷியல் வைத்திருக்கிறது)

அஸப் உருதுபாஷை 1
தமிழ் தர்ஜமா 1
ஆக 2

To

All whom it may concern.

Permit the bearer hereof Pararoolalaramanooja Jeeyer (Priest) native of Terookooroongody Vulliyoor taluk Zillah Tirunelveli to pass from hence north ward to Banares with Palankuins two, silver Cudgels two, Chaorooty two, Chamarams four, Umbrellas four, swords four, spears two, muskets four, Elephant one Horses five, Carts three and five bullock together with about one hundred followings including Bramins, also a few trumpets, without molestation.

Supdt. Office
Bangalore (sd)
20th April 1850. Superintendent Bangalore Division.

சம்பந்தப்பட்ட யாவருக்கும்.

திருநெல்வேலி ஜில்லா, வள்ளியூர் தாலுகா திருக்குறுங்குடி பூர்வீயாக இருப்பவராகிய பேரருளாள ராமானுஜஜீயர் அவர்கள் இவ்விடத்திலிருந்து வடதிசை நோக்கி பனாரஸுக்கு பல்லாக்குகள் 2, வெள்ளி தடிகள் 2, சுருட்டி 2, சாமரம் 4 குடைகள் 4, வாள்கள் 4, ஈட்டிகள் 2, பாதுகாப்பு ஆயுதங்கள் 4, யானை 1, குதிரைகள் 5, வண்டிகள் 3, மற்றும் காளைகள் 5, இவைகளுடன் பிராமணர்கள் அடக்கம் சுமார் 100 நபர்கள், மற்றும் முரசுகளுடன் செல்ல எவ்வித தடங்கல் இன்றி செல்வதற்கு இந்த அனுமதிச் சீட்டை வைத்திருக்கிறார்கள்.

சூப்ரெண்டெண்ட் ஆபீஸ்
பெங்களூர் (கையெழுத்து) சூப்ரெண்டெண்ட்
20 ஏப்ரல் 1850 பெங்களூர் டிவிஷன்

acharya.org

TO ALL WHOM IT MAY CONCERN :

Permit the bearer here of Pararoolalaramanooja Jaeyer (Priest), Native of Terookooroongoody Vulliyoor Talook to Pass hence to Banares with I elephant, 5 horses, 5, bullocks. 3 carts, 2 palanqueens, 4 umbrellas, 4 swords, 4 matchlocks, 2 spears, 2 chorooty, 2 chamarams and 60 followers, without molestation.

Bangalore Police office 15th April 1850.

sd x x x x
Superintendent of Police

சம்பந்தப்பட்டவர்கள் யாவருக்கும்

திருநெல்வேலி ஜில்லா வள்ளியூர் தாலுக்கா, திருக்குறுங்குடி பூர்வீயாக கொண்டவரும் ஆகிய ஸ்ரீ பேரருளாள ராமானுஜ ஜீயர் அவர்கள் பனாரஸீக்குச் செல்ல எவ்வித தடங்கலும் இல்லாமல் செல்ல இந்த அனுமதி வழங்கப்படுகிறது. அவர்களுடன் ஒருயானையும், 5 குதிரைகளும், 5 காளைகளும் மூன்று வண்டிகளும், இரண்டு பல்லாக்குகளும், நான்கு குடைகளும். 4 வாள்களும், 4 தீவட்டிகளும் 2 ஈட்டிகளும் 2 சுருட்டிகளும் 2 சாமரங்களும் 60 பேர்களுடன் செல்கிறார்கள்.

பெங்களூர் போலீஸ் ஆபிஸ்
15 ஏப்ரல் 1850.

(கையொப்பம்)
சூப்பிரண்டெண்டெண்ட் ஆப் போலீஸ்.

acharya.org

No. 3

Seal of the Magistrate VI Zilla
Mazulipatam

This Holds Good for
6 Months.

LICENSE

is hereby granted to Sri Peraroolala Ramanuja Jeer, Priest of the Monastery at Terookooroongoody, Valliyoor Taluk Tirunelveli District under the authority of Act XXXI of 1860 Section 28 to carry arms and to go armed to Jaggannad. Dated this 28th day of February 1866.

2 Muskets
2 Swords.

sd x x x x
Acting Joint Magistrate
in charge.

மசூலிப்பட்டம் ஜில்லா
மாஜிஸ்திரேட் முத்திரை

ஆறு மாத காலம்
செல்லுபடியாகும்

1860, 31வது சட்டம் செக்ஷன 28ன் கீழ் திருநெல்வேலி ஜில்லா, வள்ளியூர் தாலுகா, திருக்குறுங்குடி, சந்நியாசி மடத்தின் தலைவரான ஸ்ரீ பேராருளாள ராமானுஜ ஜீயர் அவர்கள் ஜகன்னாத்துக்குச் செல்ல பாதுகாப்பு ஆயுதங்களை எடுத்துச் செல்ல இதன்படி லைசென்ஸ் வழங்கப்படுகிறது.

20 பிப்ரவரி 1866.
தடிகம்புகள் 2
வாள்கள் 2

(கையெழுத்து)
ஜாயிண்ட் மாஜிஸ்திரேட்
பொருப்பில் உள்ளவர்

acharya.org

Banares, 4 March, 1854

Permit to pass without molestation Jeer swami from Banares to poore Jugganath accompanied by 2 elephants 2 Palkees 2 Pennis 10 Camels, 15 Horses 8 Carts 155 followers, 16 armed attendents and 20 drummers and torch bearers.

This passport is to have effect for two months from this date

(Sd)

Agent to Governor General.

The above is translated in Urudu below.

acharya.org

ஆஜ்மீர் தேசத்தில்வந்திருக்கிற
திருக்குருங்குடி மடம் ஸ்ரீ ஜீயர்
ஸ்வாமியவர்களுக்கு உருது
பாஷையில் குடுத்தரகதாரிக்கு
தமிழ்தர்ஜிமா

ஜாட்டு ராஜஸ்தானம் கோர்ட்டுமுகர்

கெவர்னர் ஜனரல் அவர்கள் உத்தரவுப்படி எல். சோ. கலைக்டர்யென்று இங்கிலீஷில் கையெழுத்து வைத்திருக்கிறது.

இங்கிலீஷ் கெவர்ண்மெண்டாரவர்களுடையவும் மற்ற ராஜத்துவாரத்திலுமிருக்கப்பட்ட சகலகீழ் உத்தியோகஸ்தர்களுக்குத் தெறிவிக்கிறதென்ன வென்ருல் தெக்ஷிண ராஜ்யத்திலிருந்து வந்திருக்கிற ஸ்ரீ ஜீயர் ஸ்வாமியவர்கள் தீர்த்த யாத்திரை முதலான விசேஷங்கள் கழிந்தவுடனேயிதனடியிற் கண்ட சிக்ஷியர் முதலான பேர்களும் பல்லக்கு யானை முதலான சாமான் சகிதம் யாத்திரை காலங்களிலும் அவடத்தில் தங்கியிருக்கிற காலங்களிலும் இரம்பவும் பந்தோபஸ்தாக கூர்த்து உத்தரவாதம் செய்யவேணும்.

சாமான் விபரம்

யானை 3, பல்லக்கு 2, பானஸ் குடை 2, குதிரை 15, சிபாய் 3, பிராமணுளும் சூத்திராளும் 125 ஒட்டகை 10, வாத்தியக்காரர்கள் 20, வண்டி 8.

13-12-1852. (இனிஷியல்) எல் சோ.

கலைக்டர் என்று இங்கிலீஷில்
எழுதியிருக்கிறது.

அஸல்	1
தமிழ்தர்ஜமா	1
ஆக	2

acharya.org

No. 3 of 1852

To all whom it may Concern

It is requested that the undermentioned persons be permitted to pass through the Hon'ble Company's territories without hindrance or molestation.

Name of the persons	Where residing	Attendents	Bagage	Where proceeding	Remarks
Peraroolala Ramanooja Jeer	Tirunelveli District Taluka Valliore	4 Chamarams 21 Sepoys 15 Horses 5 Carts 10 Bullocks 125 Brahmins 2 Elephants 4 Umbrellas 2 Palanquins 4 Silver Cudgels 4 Chooroots 2 Camels 2 Asmanageree 4 Nugara 8 Puttuvalls	Household Bagage	From Ahemedabad to Banares Via Badreenath etc	

This passport will have effect for two / 2 / years from this date.

Ahmedabad Magistrates Office.
16th September 1852

(Sd)
Acting Magistrate

acharya.org

41வது பட்டம் ஸ்ரீசடகோபராமாநுஜ ஸ்வாமி

பரம்பரைத்தனியன்

ஸ்ரீமச்சடாரியதிராட்வரயோகிபக்தம்
ஸ்ரீவாமநாஸ்ரீமமுநீந்த்ரகடாக்ஷபாத்ரம்
தீபக்திசாந்திகருணாதிகுணைருபேதம்
ராமாநுஜம் யதிவரம் சிரஸா நமாமி !!

திருநக்ஷத்ரம் மாசி மாசம் பரணி

வாழித்திருநாமம்

மட்டவிழும் பொழில்குருகை வாழவந்தோன் வாழியே
மாசிதனில் பரணிநன்னாள் வந்துதித்தான் வாழியே
சிட்டர்பலர் தொழுதேத்துந் திருவடியோன் வாழியே
ஸ்ரீராமாநுஜமுனியைத் தினந்தொழுவோன் வாழியே
அட்டதிக்கும் புகழ்நம்பி யடிதொழுவோன் வாழியே
அடியார்கள் துயரனைத்தும் அகற்றுவிப்போன் வாழியே
எட்டெழுத்தி னுட்பொருளை ஈந்தருள்வோன் வாழியே
எந்தை சடகோபமுனி யிணையடிகள் வாழியே.

42-ஆவது பட்டம் ஸ்ரீ பட்டர்பிரான் ஸ்வாமி

பரம்பரைத்தனியன்

யஸ்ஸித்தாஸ்ரீமயோகிதுக்தஜலதே:
பீத்வாஸுதாம் சிந்மயீம்
த்ரய்யந்தார்த்த ஸுதார்த்திஷுப்ரதிதினம்
சாத்ரேஷுவர்ஷந்பஹு!
ஸர்வாஸஹ்யபவாநலக்லபித ஹ்ருத்தா
பாபநோதக்ஷமஸ்
தம் ஸ்ரீ லக்ஷ்மணயோகிவர்யஜலதம்
வந்தே ஜனைஸ் ஸம்ஸ்துதம் !!

திருநக்ஷத்ரம் ஐப்பசி மீ ஹஸ்தம்

acharya.org

வாழித்திருநாமம்

சீர்மல்குங் குறுங்கைநகர் சிறக்கவந்தோன் வாழியே
சிறந்த துலாம் அஸ்தத்தில் செகத்துதித்தான் வாழியே
தார்திகழும் மணிமார்பும் தடந்தோளும் வாழியே
சதிரான ப்ரபந்தார்த்தம் சாற்றுமவன் வாழியே
ஏர்வளரும் எதிராசனிணையடியோன் வாழியே
எங்கள்குலக்குருவாகி யிலங்குபிரான் வாழியே
பார்புகழும் வேதாந்தம் பகருமவன் வாழியே
பட்டர்பிரான் முனிபதங்கள் பாருலகில் வாழியே.

43-ஆவது பட்டம் ஸ்ரீகலியன் ராமாநுஜஸ்வாமி

பரம்பரைத் தனியன்

ஸ்ரீசித்தா ஸ்ரீமயோகிவர்யகருணா
பூர்ணப்ரவாஹாம்புதிம்
ஸ்ரீமத்த்ராவிடவேதஸாரதமஹம்
ராமாநுஜார்யம் முநிம் ।
ஸ்ரீமத் பூர்ணகடாக்ஷபூரவிலஸத்
ஸௌம்யோபயந்தூர் முநே
சித்தாந்தப்ரதிரோதிவர்கஜயஸம்
பத்தைகதீக்ஷம் பஜே ॥

திருநக்ஷத்ரம் வைகாசி மீ அஸ்வதி

வாழித்திருநாமம்

வையமுரை சடகோபன் வளமுரைப்போன் வாழியே
வைகாசி யசுவதியில் வந்துதித்தான் வாழியே
பொய்கை முதல் பதின்மர்கலைப்பொருளுரைப்போன்
வாழியே
பூதூரர் அடியிணையைப் போற்றுமவன் வாழியே

acharya.org

கையிலணி முக்கோலும் கண்ணிணையும் வாழியே
கருணைமிகு குறுங்கைநம்பி கழல்தொழுவோன் வாழியே
செய்யமலர்த்துளபமணிதிருமார்பன் வாழியே
திருக்கலிய மாமுனிவன் திருவடிகள் வாழியே

44-வது பட்டம் ஸ்ரீ மதுரகவி ஸ்வாமி

பரம்பரைத்தனியன்

ஸ்ரீ ஸித்தாஸ்ரீமயோகிவர்யக்ருபயா
ஸம்ப்ராப்தபோதோதயம்
ஸ்ரீ கல்யாணகுணோததிம்புதகணை
ஸ்ஸேவ்யம் மஹாநந்தம் குரும் !
ஸ்ரீ வாக்பூஷண தத்த்வபோதநிபுணம்
ஸ்ரீ பூர்ணஸம்ஸேவிநம்
ஸ்ரீமத்திவ்யகுருங்கஸம்யமிவரம்
ராமாநுஜார்யம் பஜே !!

திருநக்ஷத்ரம் ஆடி மீ" ரோகிணி

வாழித்திருநாமம்

அட்டதிக்கும் புகழ்குறுங்கை யாளவந்தோன் வாழியே
ஆடிதன்னில் ரோகிணிநாள் அவதரித்தான் வாழியே
சிட்டர்களுக்காழிசங்கம் செய்தருள்வோன் வாழியே
செகத்தலத்தில் ஆரியனைச் சிவக்கவந்தோன் வாழியே
துட்டர்மதம் நிரசிக்கத் துணிந்துவந்தான் வாழியே
துரீயாச்ரமந்தன்னைத்வரித்து வந்தான் வாழியே
மட்டில் பொருள் வேதாந்தம் வகுத்தருள்வோன் வாழியே
மதுரகவி மாமுனிவன் மலரடிகள் வாழியே

acharya.org

44 வது பட்டம் மதுரகவி ஜீயர்ஸ்வாமிகள்

acharya.org

45-வது பட்டம் ஸ்ரீ ராமாநுஜ ஸ்வாமி

பரம்பரைத் தனியன்

ஸ்ரீ ஸித்தாஸ்ரீமஸம்யமீந்த்ரசரண
த்வந்த்வைக ஸம்சிந்தநம்
ஸ்ரீமத் ஸுந்தரபூர்ணபாதகமல
ஸ்யந்த்யாபிபந்தம் மது ।
ஸ்ரீ கார்யாத்மஜயத்யதீச மநஸம்
த்ரய்யந்தவித்பூஷணம்
ஸ்ரீ ராமாநுஜயோகிநம் பகவத:
கைங்கர்யநிஷ்டம் பஜே ॥

திருநக்ஷத்திரம் பங்குனி மீ திருவாதிரை

வாழித்திருநாமம்

சீர்வளருங் குறுங்கைநகர் சிறக்கவந்தோன் வாழியே
செயமீனத் தாதிரைநாள்செகத்துதித்தான் வாழியே
ஏர்வளரும் மதுரகவி யிணையடியோன் வாழியே
எதிராசனிணையடியை யிறைஞ்சுமவன் வாழியே
பார்புகழும் பராங்குசரின் பதம்பணிவோன் வாழியே
பதின்மர்கலைப் பல்பொருளைப் பகருமவன் வாழியே
தீரமுடன் வாதியர்தம் செருக்கழித்தான் வாழியே
ஸ்ரீ ராமாநுஜமுனிவன் திருவடிகள் வாழியே.

45-வது பட்டம் ஸ்ரீ ராமாநுஜ ஸ்வாமி 1065ம் ஆண்டு மாசி மாதத்தில் ஆஸ்ரம ஸ்வீகாரம் பெற்று ஸ்தானத்துக்கு எழுந்தருளினர். 30 சாதுர்மாஸ்யம் எழுந்தருளியிருந்தார்.

ஸ்ரீ ஸ்வாமி நம்பி ஸன்னிதியில் கைசிக மண்டபத்தில் விசேஷமான திருப்பணிகள் நடத்தி புதிதாக கதவுகள் போட்டு மண்டபத்தை பக்தர்கள் மகிழும்படியான

acharya.org

அழகுபடுத்தினர். நாச்சியார், வீற்றிருந்த நம்பி ஆழ்வார் ஆசாரியர்களுக்கு ஜடிபந்தன ஸம்ப்ரோக்ஷணம் நடத்தினர்.

அக்கும்புலியும் அதனும் உடையாரான பக்கம் நின்றருக்கும். காலபைரவர் முதலானவர்களுக்கும் ஸம்ப்ரோக்ஷணம் நடத்தப்பட்டது. ஷை ஸம்ப்ரோக்ஷணங்கள் உலகம் புகழும் படியாக நடத்தப்பட்டது

திருமலை நம்பி ஸன்னிதியில் மஹாஸம்ப்ரோக்ஷணம் லோகோத்தரமாக நடத்தப்பட்டது. மடத்தில் அநேக கட்டிடங்கள் புதிதாக கட்டப்பட்டது. ஆழ்வார்திருநகரியில் மடம் அம்பாசமுத்திரம் கருங்கல்லால் புதியதாக மண்டபம் அழகாக கட்டப்பட்டது.

ஸ்ரீ ஸ்வாமி நம்பி ஸன்னிதி ராயர் கோபுரவாசலில் வாசல் சிறியதாகவும் இடைஞ்சலாகவும் இருந்ததை பெரியதாகவும் பெரிய கதவுகள் போட்டு அழகு படுத்தும் படியான முன் ஏற்பாடுகள் செய்து வைக்கப்பட்டது. ஸ்ரீ ஸ்வாமி நம்பி ஸந்நிதியில் புராதனமான தென்னாசாரிய சம்பரதாயத்தைத் நிலை நிறுத்தியருளினர். மடத்துக்கு அநேக சொத்துக்கள் வாங்கியும் மடம் முந்நிலைக்கு கொண்டு வரப்பட்டது.

திருப்பரிவட்டப்பாரை என்ற உடையவர் ஸந்நிதியில் அநேக கட்டிடங்கள் கட்டி மஹா ஸம்ப்ரோக்ஷணம் நடத்தப்பட்டது.

46-வது பட்டம் ஸ்ரீ சடகோப ராமாநுஜ ஸ்வாமி

பரம்பரைத்தனியன்

ஸ்ரீராமாநுஜ யோகிவர்யகருணாஸம்ப்ராப்த யத்யாச்ரமம்
ஸ்ரீமத்ஸுந்தர பூர்ணபாத கமலத்வந்த்வைக
ஸம் ஸேவிநம் !

acharya.org



45-வது பட்டம் ஸ்ரீஸ்ரீ ராமாநுஜ ஜீயர் ஸ்வாமிகள்

acharya.org

4௬-வது பட்டம் ஸ்ரீமத் பரம ஹம்ஸேத்யாதி
ஸ்ரீ ஸ்ரீ சடகோப ராமாநுஜ ஜீயர் ஸ்வாமி
திருக்குறுங்குடி ஸ்ரீ பேரருளாளராமாநுஜ ஜீயர்ஸ்வாமி மடம்

acharya.org

ஸ்ரீபாஷ்யார்த்த விதக்ரகம் சடவிஜித்
ப்ரேமாவலோகாஸ்பதம்
ஸ்ரீமத் வாமந தாமயோகிந மஹம் காருண்ய
வார்த்திம் பஜே !!

திருநக்ஷத்ரம் பங்குனி மீ விசாகம்

வாழித்திருநாமம்

வண்டறையும் பொழில் குறுங்கை வாழவந்தோன்
வாழியே
வளர்மீன் விசாகத்தில் வந்துதித்தான் வாழியே
எண்டிசையும் நம்பி புகழ் எடுத்துரைப்போன் வாழியே
எழில்மிகுச்ரீ பலிமண்டபம் இனிதமைத்தான் வாழியே
தொண்டர் தொழுமிராமானுசன் துணைப்பதத்தோன்
வாழியே
தொல்புகழ் தென்ஞரியர்சொல் துலக்கவந்தோன்
வாழியே
தண்டமிழ் நூல் ஈடுதனைத் தானுரைப்போன் வாழியே
சடகோப மாமுனிவன் தாளிணைகள் வாழியே

46-வது பட்டம் ஸ்ரீ சடகோப ராமானுஜ ஸ்வாமி கொல்லம் ஆண்டு 1093 காலயுக்தி ஆனி மீ துரியாஸ்ரம் பெற்றுக்கொண்டார்.

ஸ்ரீ ஸ்வாமி நம்பி ஸந்நிதி ராயர் கோபுரவாசலுக்கு 45-வது பட்டம் ஸ்ரீ ராமானுஜ ஸ்வாமியால் தயார் செய்து வைக்கப்பட்டபடி பெரிய கல்நிலையில் தமர் போட்டு இருப்பு கொண்டி மாட்டி பெரிய கதவு உலகம் புகழும்படி செய்யப்பட்டது யாவரும் பார்க்கலாம்.

ஷை கோபுரவாசலில் புதிதாக கல்மண்டபம் போடப் பட்டது கோவிலுக்குள் ஸ்ரீ பலிமண்டபம் போடப்பட்டது திருவாய்மொழி மண்டபம் மேற்கடைய புதியதான

acharya.org

மண்டபம் பெருமாள் எழுந்தருள குரடு நிர்மாணிக்கப் பட்டது மடத்து வாசலில் மண்டபம் போடபட்டது திருத் தேர் ரிப்பேர்கள் செய்யப் பட்டதுடன் இதுவரையில்லாத இரும்பினுல் அச்சுகள் போடப்பட்டது, ஸ்ரீ நம்பிக்கு அநேகம் திருவாபரணங்கள் வாங்கப்பட்டது ஆழ்வார் திருநகரியில் மடத்துக்கு கீழ்பக்கமுள்ள கல்மண்டபம் ஸி லைக்கு வாங்கப்பட்டது. ஸ்ரீ மணவாள மாமுனி ஸன்னதி வாங்கப்பட்டது.

95-வது திருநக்ஷத்திரம் ஆனவாரே ஸ்ரீ ஸ்வாமி நம்பிஸந்நிதி கைங்கரிய ஸ்ரீ காரியராகவும் மடத்தின் சிஷ்யராகவும் எழுந்தருளியிருந்த ஸ்ரீ பெரிய நம்பி கிருஷ்ண அய்யங்கார் ஸ்வாமியை ஆஸ்ரம ஸ்வீகாரம் செய்வித்து 47-வது பட்டமாக நியமித்தருளி மூன்று வருஷங்கள் எழுந்தருளியிருந்தார்.

அன்று ஸ்ரீ ஆளவந்தாரையும் எதிராஜரையும் சேவிக்காத குறைதீர ஸேவித்து மகிழ்ந்தனர் சிஷ்யர்களும் அபிமானிகளும் பரபந்நர்களும் ''வேதநூல் பிராயம் நூறு'' என்ற ஆழ்வார் திருவாக்கின் படி நூறு திருநக்ஷத்திரங்களும் 46 சாதுர்மாஸ்யங்களும் எழுந்தருளியிருந்து ஸ்தானத்தை அலங்கரித்த பெருமையையுடையவர். இந்த ஸ்ரீ பரமஹம்ஸ இத்யாதி ஸ்ரீ சடகோப ராமானுஜ ஸ்வாமி.

47-வது பட்டம்

ஸ்ரீ பட்டர் பிரான் ஜீயர் ஸ்வாமி

பரம்பரைதனியன்

ஸ்ரீ'காரிஸூநுயதிராஜ க்ருபாபிலப்த
துர்யாச்ரமம் விசத வாங்மணி ஸூக்தி போதம்

acharya.org

Page......29

RAJENDRA VINNAGAR

By R. Tirumalai

Tirumalirunjolaippriyan, one of the Sri Vaishnavas of Tirukkurungudi Tiruppati wrote this agreement to their dictation.

It could be noted that the earliest resident Sri Vaishnavas in the village were, by tradition, said to be affiliated to the Periyanmbi sect of Tirukkurungudi and these signatories might be of the same stock. Some of them could be sattadar or non-Brahmin Vaishnavites.

Page......48

An extension of a colony of Vaishnavite families occupying the Sannadhi Street to the east of the Car Street had occured during the period. It should be noted the large number of Tengalai Vaishnavites and a few of Vadagalai sect therein are quite different from the social homogeneity of the far earlier colonists occupying the three mada streets around the Temple who belonged to the Perinambi sect and are disciples of the Tirukkurungudi mutt. Their ancestors were doubtless the original colonists of the township from Chera and Chola Times.

acharya.org

பக்கம் - 29

திருக்குறுங்குடி திவ்ய தேசத்தைச் சேர்ந்த ஸ்ரீ வைஷ்ணவர் திருமாலிருஞ்சோலைப் பிரியன் எழுதிய சாசனம்.

இந்த கிராமத்தில் பழங்காலம் முதல் வாழ்ந்து வரும் ஸ்ரீ வைஷ்ணவர்கள் பரம்பரை பரம்பரையாக திருக்குறுங்குடியிலுள்ள பெரிய நம்பி வம்ஸத்தைச் சார்ந்தவர்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அவர்களில் சிலர் சாத்தாத ஸ்ரீ வைஷ்ணவர்களாகவும், அல்லது பிராமணரல்லாத ஸ்ரீ வைஷ்ணவராகவும் இருந்திருக்க கூடும்

பக்கம் 48

தேரடித் தெருவிற்கு கிழக்கே சன்னதித் தெருவில் ஸ்ரீ வைஷ்ணவர்களின் குடியிருப்பு விஸ்தரிப்பு இந்த காலத்தில் ஏற்பட்டது பெருவாரியான தென்கலை ஸ்ரீ வைஷ்ணவர்களும், பழங்கால ஸ்ரீ வைஷ்ணவ சமுதாய நாகரிகங்களிலிருந்து மாறுபட்ட சில வடகலை ஸ்ரீ வைஷ்ணவர்களும் கோவிலைச் சுற்றி மூன்று மாட வீதிகளில் வாழ்ந்து வந்தனர் அவர்கள் பெரியநம்பி வம்ஸத்தவராகவும் *திருக்குறுங்குடி மடத்து சிஷ்யர்களாகவும் இருந்தனர் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது அவர்களுடைய முன்னோர்கள் சேர. சோழர் காலத்தில் இருந்து இந்த கிராமத்தில் பழங்கால குடியினராக வாழ்ந்து வந்திருக்கின்றனர் என்பது உறுதியாகிறது இப்போது

குறிப்பு : *ஸ்தானம் மாற்றிக் கொண்டிருப்பதாக கர்ண பரம்பரையாக சொல்லப்படுகிறது.

தமிழாக்கம் - K. சுந்தரம்

acharya.org

47வது பட்டம் ஸ்ரீ பட்டர்பிரான் ஜீயர் ஸ்வாமி

acharya.org

ஸ்ரீ பூர்ண பக்தி பரிதம் ச்ரிதபாரிஜாதம்
ஸ்ரீ பட்டநாத முனிவர்ய மசிச்ரியாம

திருநக்ஷத்திரம் புரட்டாசி மீ அவிட்டம்

வாழித்திருநாமம்

செம்பொன் மதின் குறுங்கைநகர் செழிக்க வந்தோன் வாழியே
சிறந்த கன்னி அவிட்டத்தில் செகத்துதித்தான் வாழியே
உம்பர் தொழும் குருங்கேசர்க்கு உகப்புடையோன் வாழியே
உலகாரியன் சொற்பொருளை உகந்தளிப்போன் வாழியே
எம்பெருமானுர் தரிசனத்தை ஏற்றிவைத்தான் வாழியே
எந்தை சடகோபமுனி இணையடியோன் வாழியே
வம்பவிழ்தார் வரமுனியின் வளமுரைப்போன் வாழியே
மகிழ் பட்டநாதமுனி மலரடிகள் வாழியே

47-வது பட்டம் ஸ்ரீ பட்டர்பிரான் ஜீயர் ஸ்வாமி 1137ம் ஆண்டு சித்திரை மீ ஸ்ரீ சடகோப ராமாமநுஜ ஜீயர் ஸ்வாமியால் துரியாஸ்ரமம் ப்ரஸாதிக்க பெற்று மூன்று வருஷங்கள் பின்பழகராசம் பெருமாள் ஜீயர் நம்பிள்ளைக்கு அடிமை செய்தது போல தன்னுடைய ஸ்வசாரியருக்கு வழுவிலா அடிமைகள் செய்த பெருமையை யுடையவர் ஸ்ரீ ஸ்வாமி நம்பி ஸந்நிதி கைங்கரியங்கள் திறம்பட நடத்தியவர். த்வயத்திலும் இதிஹாஸ புராணங்களிலும் நியாயமீமாம்ஸா ஸ்ரீ பாஷ்யங்களிலும் சமர்த்தராயும் இருந்து அருளிச் செயல்களிலும் அதன் வியாக்கியானங்களிலுமே போதுபோக்காய் எழுந்தருளியிருந்தார் 41 சாதுர்மாஸ்யம் மட்டுமே எழுந்தருளியிருந்தார்.

1140ம் ஆண்டு ஸ்ரீ சடகோப ராமாநுஜ ஸ்வாமி திருநாடு அலங்கரித்த அனந்தரம் ஆசார்ய விச்லேஷத்துடன் ஒரு ஸம்வத்ஸரமே எழுந்தருளியிருந்தார்.

acharya.org

பூர்வாஸ்ரமத்தில் 46-வது பட்டம் ஸ்ரீ ஜீயர் ஸ்வாமி நியமனத்தின்பேரில் வடதேசம் போய் சாப்ரா ஸமஸ்தானத்திலிருந்து ஸ்ரீ ஸ்வாமி நம்பிக்கு திருவனந்தாழ்வான் கைங்கரியத்துக்கும் திருமஞ்சனவேதிசைக்கும் மற்றும் பொருள்கள் பெற்று வந்து கைங்கரியத்தில் ஈடுபாடு கொண்ட பெருமை படைத்தவர்,

48-வது பட்டம் (வர்த்தமான ஸ்வாமி)
ஸ்ரீ ஸ்ரீ கலியன் ராமானுஜ ஜீயர் ஸ்வாமி
பரம்பரைதனியன்

ஸ்ரீ பட்டநாதமுநிவர்ய கடாக்ஷலப்த
வேதாந்தயுக்ம வீசதீகரணப்ரவீணம் ! (நிரூபணம்)
ஸ்ரீமத் குருங்க நகரீச க்ருபாஸ்பாத்ரம்
ராமாநுஜம் (கலியும்) முனிமாஸ்ரயாம ! (கலியன்)

48-வது பட்டம் கலியன் ராமாநுஜ ஸ்வாமி "வர்த்தமான ஜீயர் ஸ்வாமி 1966 பங்குனி மாதத்தில் 47வது பட்டம் பட்டர்பிரான்" ராமாநுஜ ஜீயர் ஸ்வாமியால் ஆஸ்ரம ஸ்வீகாரம் செய்து வைக்கப்பட்டது ஸ்ரீ ஸ்வாமி அழகிய நம்பி ஸந்நிதி கைங்கரியங்களையும் மடத்தின் நிர்வாகத்தையும் நிர்வகித்து வருகிறார்.

1981ம் வருஷம் துர்மதி ஆண்டு 1157. ஆவணி மாதம் 19உ வெள்ளிக்கிழமை 4-9-81 ஸ்ரீ ஸ்வாமி நம்பி மூலவர், வீற்றிருந்த நம்பி, பள்ளி கொண்ட நம்பி ஆழ்வார்கள் ஆசாரியர்கள் முதலானவர்களுக்கு அஷ்ட பந்தன ஜீர்ணோத்தாரண விமான ஸம்ப்ரோக்ஷணம் லோகோத்தரமாக நடந்தது அக்கும்புலியும் அதளும் உடையால் அவர் ஒருவர் பக்கம் நிற்க நின்றபண்பர் என்றபக்கநினைரர். காலபைரவர்களுக்கும் அஷ்டபந்தன விமான ஸம்ப்ரோக்ஷணம் அதே தினத்தில் மிகவும் விமரிசையாக நடந்தது.

acharya.org



வர்த்தமான ஸ்வாமி
48 வது பட்டம்
ஸ்ரீ ஸ்ரீ கலியன் ராமாநுஜ ஜீயர் ஸ்வாமிகள்

acharya.org

1986ம் வருடம் கார்த்திகை மாதத்தில் கைசிக ஏகாதசியன்று ஸ்ரீ ஸ்வாமி நம்பிக்கு இதுவரையிலும் இல்லாத திருவாபரணமாக தங்கம் முத்து, பவழம் இவைகள் கொண்டு செய்யப்பட்ட ''புலிநகம், ஆமை நகம்'' மாலை சமர்ப்பித்து சாத்தப்பட்டது.

ஸ்ரீ ஸ்வாமி எம்பெருமானாரின் அபராவதாரமான ஸ்ரீமத்வரவரமுனியின் அவதார திவ்யதேசமான முப்பரி யூட்டின திருக்குருகூரிலே, ஸ்ரீமணவாளமாமுனி ஸந்நிதி கோபுர விமான ஜீர்ணோத்தாரணமான ஸம்ப்ரோக்ஷணம் 9-6-88ல் அதிவிமரிசையாகவும் உலகம் புகழும்படியாக நடந்தது. டி ஸம்ப்ரோக்ஷணத்தை நடத்தி வைக்கவும் ஸ்ரீ ஸ்வாமி ஆதிநாதர் ஆழ்வார் மங்களாசாஸனத்துக் கும் வைகாசி 23உ ஞாயிற்றுக்கிழமை 5-6-88 திருக் குறுங்குடி இருந்து ஆழ்வார்திருநகரிக்கு முதல் தடவை யாக ''காரில்'' (டாக்ஸி) எழுந்தருளினார். சிஷ்யார்கள் கைங்கரியபார்கள் சகிதம் ஆழ்வார்திருநகரிக்கு எழுந்த ருளியதும் ஸ்ரீ ஆதி நாதர் ஆழ்வார் ஸந்நிதியிலிருந்து வழக்கம் போல் அரிவாணப்ரஸாதம் எழுந்தருள பண்ணி யதை பெற்றுக்கொண்டு பட்டப்பல்லக்கில் வீதிபட்டண ப்ரவேசமாய் ஸ்ரீ ஆதிநாதர் ஆழ்வார் ஸந்நிதிக்கு எழுந் தருளினார். (வீதியில் ஆரத்தி எடுக்கப்பட்டதற்கு ஒரு ரு தக்ஷிணையும் அக்ஷதையும் போடப்பட்டது.)

கொடி மரத்தடியில் ஸ்ரீ ராமாநுஜனை எழுந்தருள பண்ணி மரியாதை பெற்றுக்கொண்டு, ப்ரதக்ஷிணமாக ஸ்ரீ ஸ்வாமி ஆழ்வார் பொன்னுங்குரட்டில் எழுந்தருளி யிருப்பதை தெண்டம் சமர்ப்பித்து விட்டு பொன்னுங்குர ட்டில் எழுந்தருளி (ஏறி) இதுவரையில் ஆழ்வார் சாத்திக் கொள்ளாத தங்கள், பவழம் முத்து இவைகள்கொண்டு

acharya.org

செய்யப்பட்ட ''புலிநகம், ஆமைநகம்'' மாலையை சமர்ப்பித்து சாத்தும்படி செய்து மற்றும் பட்டு உபகாரங்கள் சமர்ப்பிக்கப்பட்டது. பின் பொன்னுங்குரட்டில் வழக்கம் போல் சகல மரியாதைகளையும் பெற்றுக் கொண்டு ஸ்ரீ ஸ்வாமி ஆழ்வாருக்கு திருவாலவட்டம் கைங்கரியம் செய்து கொண்டு மங்களாசாஸனம் செய்து கொள்ளப் பட்டது. ஸ்ரீ ஸ்வாமி ஆதிநாதர் ஸந்நிதிக்கும் எழுந்தருளி மங்களாசாஸனம் செய்யப்பட்டது.

6-6-88 7-6-88 இரண்டு நாள்களும் ஸ்ரீ ஸ்வாமி ஆழ்வார் ஸன்னிதிதிருப்பாவை சாத்துமுறை கோஷ்டிக்கு எழுந்தருளி வழக்கம்போல் கோஷ்டி மரியாதை பொன்னுங்குரட்டில் மரியாதை பெற்று மங்களாசாஸனம் செய்து கொள்ளப்பட்டது.

5-6-88ல் எம்பெருமானார் ஸந்நிதி மங்களாசாஸனம் செய்யப்பட்டது ஸ்ரீ எம்பெருமானார் ஜீயர் ஸ்வாமியை க்ஷேமம் விசாரித்து சால்வை மரியாதை செய்யப்பட்டது எம்பெருமானார் ஜீயர் ஸ்வாமியாலும் பட்டு மரியாதை செய்யப்பட்டது.

5-6-88 சாயந்திரம் முதல் 9-6 88 முடிய ஸ்ரீ மணவாள மாமுனி ஸன்னதி ஸம்ப்ரோக்ஷண வேதபாராயண திவ்ய ப்ரபந்த கோஷ்டிகளில் எழுந்தருளியிருந்து விசதவாக் சிகாமணியை மங்களாசாஸனம் செய்துகொள்ளப்பட்டது

10-6-88 ல் ஸ்ரீவைகுண்டம், வாகுணமங்கை, திருப்புளியங்குடி, பெருங்குளம், ரெட்டைத் திருப்பதி மங்களாசாஸனம் செய்து கொண்டு திருக்குருகூருக்கு எழுந்தருளப்பட்டது.

acharya.org

11-6-88 திருக்கோளூர் தென்திருப்பேரை மங்களா சாஸனம் செய்யப்பட்டது. தென்திருப்பேரையில் கிருமத்திலிருந்து மிகவும் அழகாகவும் அன்புடனும் அபிமானத்துடனும் செய்த ததியாராதனத்தை முடித்துக்கொண்டு ஆழ்வார்திருநகரிக்கு எழுந்தருளப்பட்டது.

12-6-88 திருக்குருகூர் இருந்து காலே 8-30க்கு மேல் புறப்பட்டு எழுந்தருளி ஸ்ரீ வானமாமலே பெருமாள் ஸ்ரீ வரமங்கை தாயார் தெய்வநாயகன் மங்களாசாஸனம் செய்து கொள்ளப்பட்டது.

ஸ்ரீ வானமாமலே ஜீயர் ஸ்வாமி மடத்திற்கு எழுந்தருளப்பட்டது. பரம்பரையில் 28வது பட்டமாக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ஜீயர் ஸ்வாமியை க்ஷேமம் விசாரித்தும் ஸ்வாமிக்கு சால்வை மரியாதை செய்யப்பட்டது.

ஷை ஸ்ரீ ஜீயர் ஸ்வாமியால் செய்த சால்வை மரியாதையையும் பெற்றுக் கொண்டு ததியாராதனம் முடிந்து மாலே 3 மணிக்கு புறப்பட்டு வைஷ்ணவ வாமனத்தில் ஸ்ரீ நம்பியை மங்களாசாஸனம் செய்ய எழுந்தருளப்பட்டது.

வானமாமலே ஸ்ரீ ஜீயர் ஸ்வாமி திருக்குறுங்குடி வரையில் தம்முடைய கைங்கரியபரர்கள் அனுப்பினது ஸ்ரீ ஜீயர் ஸ்வாமி (திருக்குறுங்குடி) ரொம்பவும் புகழ்ந்து கொண்டார்.

48வது பட்டம் ஸ்ரீ கலியன் ராமாநுஜ ஜீயர் ஸ்வாமி ஸ்ரீ வானமாமலே பெருமாள் ஸ்ரீ வரமங்கைதாயார் தெய்வநாயகன் மங்களாசாஸனத்துக்கு எழுந்தருளி மங்களாசாஸனம் செய்தது வரலாற்றிலேயே முக்கியமான விஷயம் அடங்கியுள்ளதாக ஸ்ரீ வைஷ்ணவர்கள் பலரும் புகழ்ந்து பேசிக்கொண்டது குறிப்பிடத்தக்கது.

acharya.org



2-9-81 திருக்குறுங்குடி ஸ்ரீ ஸ்வாமி அழகிய நம்பி
ஸந்நிதியில் 1981ல் நடந்த மஹாஸம்ப்ரோக்ஷணத்தில்
யாகசாலை ஸ்ரீ பேரருளாள ராமாநுஜ ஜீயர் ஸ்வாமி
ஸ்ரீ வைஷ்ணவர்களின் அருளிச் செயல் கோஷ்டி

acharya.org

5–6–88 வைகாசி 23-உ திருக்குருங்குடி
ஸ்ரீ பேரருளாள ராமானுஜ ஜீயர் ஸ்வாமி
ஸ்ரீ ஸ்வாமி ஆதிநாதர் ஆழ்வார் மங்களா
சாஸனத்துக்கு பட்ட பல்லக்கில் திருவீதி
ப்ரதிக்ஷணம் எழுந்தருளும்போது
ஸ்ரீ வைஷ்ணவர்கள் பட்டு பரிவட்டம் வகையரு
கொண்டுவரும் கோஷ்டி.

acharya.org

5-6-88 வைகாசி 23உ பொன்னுங்குரட்டில் ஸ்ரீ ஸ்வாமி ஆழ்வார், ஆமைநகம், புலிநகம் மாலையை சாத்திக் கொண்டு எழுந்தருளி இருப்பதை திருக்குறுங்குடி ஜீயர் ஸ்வாமி மங்களா சாஸனம் செய்து கொண்டு ஆழ்வாருக்கு திருவாலவட்டம் சேவிக்கிறார்.

acharya.org



6-6-88 வைகாசி 24உ ஸ்ரீ ஸ்வாமி ஆழ்வார் திருப்பாவை சாத்துமுறை கோஷ்டியில் அரையர் ஸ்வாமிகள் "வங்ககடல் பாட்டு" சேவிக்கிறார். திருக்குறுங்குடி ஸ்ரீ ஜீயர் ஸ்வாமி கோஷ்டியில் எழுந்தருளியிருக்கிறார்

acharya.org



6–6–88 வைகாசி 25உ ஸ்ரீ ஸ்வாமி ஆழ்வார்
திருப்பாவை சாத்துமுறை கோஷ்டியில்-திருக்குறுங்குடி
பேரருளாள ராமாநுஜ ஜீயர் ஸ்வாமி எழுந்தருளி
இருக்கிறார்.

acharya.org



5–6–88 வைகாசி 23-உ திருக்குருகூரில்
ஸ்ரீ ஸ்வாமி எம்பெருமானாரை மங்களாசாஸனம்
செய்து ஸ்ரீ எம்பெருமானார் ஜீயர் ஸ்வாமியை
குசலப்ரச்னம் பண்ணுகிறார்.

acharya.org

9-6-88 வைகாசி 27 ஸம்ப்ரோக்ஷணத்
தன்று ஸ்ரீ மணவாளமாமுனி ஊஞ்சலில்
எழுந்தருளி சேவைசாதிக்கிறார்

acharya.org

7-6-88 வைகாசி 25உ ஸ்ரீ மணவாள மாமுனி ஸந்நிதி யாகசாலை கோஷ்டியில் திருக்குறுங்குடி ஸ்ரீ பேரருளாள ராமாநுஜ ஜீயர் ஸ்வாமி எழுந்தருளியிருக்கும் அருளிச் செயல் கோஷ்டி

acharya.org

9-6-88 வைகாசி 27௳ திருக்குருகூரில் ஸ்ரீ மணவாள
மாமுனி ஸந்நிதி விமான கோபுர ஸம்ப்ரோக்ஷணம்
தட்டோட்டியில் ஸ்ரீபேரருளாள ராமாநுஜ ஜீயர் ஸ்வாமி
யும்ஸ்ரீ வைஷ்ணவர்களும்--ப்ரோக்ஷணம் நடப்பதை
சேவிக்கிருர்கள்.

acharya.org

12-6-88 வைகாசி 30உ திருக்குறுங்குடி
ஸ்ரீ பேரருளாள ராமானுஜ ஜீயர் ஸ்வாமி
ஸ்ரீ வானமாமலை பெருமாளை ஸ்ரீ வரமங்கைதாயார்
தெய்வநாயகர் மங்களாசாஸனம் செய்து கொண்டு
எழுந்தருளியிருக்கிறார்.

acharya.org

12-6-88 வைகாசி 30௨ திருக்குறுங்குடி ஸ்ரீ பேரருளாள ராமானுஜ ஜீயர் ஸ்வாமியை ஸ்ரீவானமாமலை ஸ்ரீ ராமானுஜ ஜீயர் ஸ்வாமி வானமாமலை மடத்தில் குசலப்ரச்னம் செய்து கொள்கிறார்கள்.

Srivastsam

acharya.org

எம்பார் முதலானவர்கள் தனியன்கள்

எம்பார்

ராமாநுஜ பதச்சாயா கோவிந்தாஹ்வாநபாயிநீ ।
ததாயத்தஸ்வரூபாஸா ஜீயாந்மத்விச்ரமஸ்த்தலீ ॥

கூரத்தாழ்வான்

ஸ்ரீவத்ஸசிஹ்நமிசரேப்யோ நம உக்திமதீ மஹி ।
யதுக்தயஸ்த்ரயீ கண்ட்டேயாந்தி மங்களஸூத்ரதாம் ॥

பட்டர்

ஸ்ரீ பராசரபட்டார்ய: ஸ்ரீ ரங்கேசபுரோஹித : ।
ஸ்ரீவத்ஸாங்கஸுத: ஸ்ரீமாந்ச்ரேயஸே மேஸ்து பூயஸே :

நஞ்ஜீயர்

நமோவேதாந்த வேத்யாய ஜகந்மங்கள ஹேதவே ।
யஸ்யவாகம்ருதாஸார பூரிதம் புவநத்ரயம் ॥

நம்பிள்ளை

வேதாந்த வேத்யாம்ருதவாரிராசேர்
வேதாந்த ஸாராம்ருதபூர மக்ர்யம் ।
ஆதாய வர்ஷந்த மஹம் ப்ரபத்யே
காருண்யபூர்ணம் கலிவைரிதாஸம் ॥

பெரியவாச்சான்பிள்ளை

ஸ்ரீமத்க்ருஷ்ணஸமாஹ்வாய நமோயாமுநஸூநவே ।
யத்கடாக்ஷைக லக்ஷ்யாணாம் ஸுலப : ஸ்ரீதரஸ்ஸதா ॥

வடக்குத்திருவீதிப்பிள்ளை

ஸ்ரீக்ருஷ்ணபாதபாதாப்ஜே நமாமி சிரஸா ஸதா ।
யத்ப்ரஸாதப்ரபாவேந ஸர்வஸித்தி ரபூந்மம ॥

acharya.org

பிள்ளைலோகாசாரியர்

லோகாசார்யாயகுரவே க்ருஷ்ணபாதஸ்யஸூநவே
ஸம்ஸாரபோகிஸந்தஷ்ட ஜீவஜீவாதவே நம :॥

திருவாய்மொழிப்பிள்ளை

நம : ஸ்ரீ சைலநாதார்ய குந்தீநமரஜந்மநே ।
ப்ரஸாதலப்தபரம ப்ராப்யகைங்கர்ய சாலிநே ॥

மணவாள மாமுநிகள்

ஸ்ரீசைலேசதயாபாத்ரம் தீ பக்த்யாதி குணார்ணவம் ।
யதீந்த்ரப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம் முநிம் ॥

வாழிதிருவாய்மொழிபிள்ளை

வாழிதிருவாய்மொழிப்பிள்ளை மாதகவால்வாழும்

... ...

தேறும்படியுரைக்கும் சீர்
செய்யதாமரைத்தாளிணைவாழியே

... ...

பொய்யிலாத மணவாளமாமுனி புந்தி வாழி புகழ்
வாழி வாழியே

அடியார்கள் வாழ அரங்க நகர் வாழ

... ...

மணவாள மாமுனியே இன்னமொரு நூற்றாண்டிரும்
சீராரும் எதிராசர் திருவடிகள் வாழியே

... ...

ஞான முத்திரை வாழியே
அறு சயமச் செடியதனையடி அறுத்தான் வாழியே

... ... —

அழகாரும் எதிராசர் அடியிணைகள் வாழியே
இப்புவியில் அரங்கேசற் கீடளித்தான் வாழியே

acharya.org

எழில்திருவாய் மொழிப்பிள்ளை இணையடியோன் வாழியே
ஐப்பசியில் திருமூலத் தவதரித்தான் வாழியே
அரவரசப் பெருஞ்சோதி அனந்தனென்றும் வாழியே
எப்புவியும் சிரீசைலம் ஏத்தவந்தோன் வாழியே
ஏராரும் எதிராசர் எனவுதித்தான் வாழியே
முப்புரிநூல் மணிவடம்முக் கோல்தரித்தான் வாழியே
மூதறியும் மணவாள மாமுனிவன் வாழியே.

செந்தமிழ் வேதியர் சிந்தை தெளிந்து சிறந்து மகிழ்ந்திடுநாள்
சீருல காரியர் செய்தருள் நற்கலைதேசு பொலிந்திடுநாள்
மந்த மதிப்புவி மானிடர் தங்களை வானில் உயர்த்திடுநாள்
மாசறு ஞானியர் சேரெதி ராசர்தம் வாழ்வு முளைத்திடுநாள்
கந்த மலர்ப்பொழில் சூழ்குரு காதிபர் கலைகள் விளங்கிடுநாள்
காரமர் மேனி அரங்க நகர்க்கிறை கண்கள் களித்திடுநாள்
அந்தமில் சீர்மண வாள முனிப்பரன் அவதாரஞ் செய்திடுநாள்
அழகு திகழ்ந்திடும் ஐப்பசி யில்திரு மூலமதெனுநாளே

ஸர்வதேச தசாகாலே ஷ்வ்யாஹத பராக்ரம
ராமானுஜார்ய திவ்யாஞ்ஞா வர்த்ததாம் அபிவர்த்ததாம்
ராமானுஜ பதாஸக்த ஸ்ரீ குருங்க நிவாஸிநே
மஹாக்ருபாவதே பூயாத் நித்ய ஸ்ரீர் நித்ய மங்களம்.

acharya.org